Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 6 செவ்வாய்க்கிழமை (20-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:175

# வெள்ளத்துக்குப் பலியானோர் எண்ணிக்கை 120 ஆக உயர்வு

## நூற்றுக்கணக்கானோரைக் காணவில்லை மோசமான காலநிலையால் மீட்புப் பணி மந்தம்

கொழும்பு,மே.20

தென்பகுதியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின் அனர்த்தங்கள் தொடருகின்றன. வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகள் காரணமாக இரத்தினபுரி, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை நேற்று 120ஆக உயர்ந்திருக்கிறது. மேலும் 500பேர் வரையிலானோரைக் காணவில்லை என அறிவிக்கப்படுகிறது. 62ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் அகதிகளாகியுள்ளன.

இரத்தினபுரி, எலபாத்தவில் ஏற்பட்ட மண் சரிவில் புதையுண்டோரின் சடலங்களை மீட்கும் பணிகள் மண்சரிவு ஆபத்துக்களால் நேற்று கைவிடப்பட்டன. இந்த மண்சரிவில் 75 பேர் புதையுண்டனர்.

களுத்துறையில் வெள்ள மட்டம் அதிகரித்துக்கொண்டிருப்பதாக களுத்

(14ஆம் பக்கம் பார்க்க)



இரத்தினபுரி நகரப் பகுதி வெள்ளக் காடாகக் காணப்படும் காட்சி.

# வெள்ளம் பாதித்த மலையக மக்களுக்கு இங்கிருந்து உதவி

## லொறிகளில் உணவுப் பொருள் செல்கிறது

யாழ்ப்பாணம்,மே20

மலையகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து உணவுப் பொருள்கள் லொறிகள் மூலம் இன்று எடுத்துச்செல்லப்படுகின்றன.

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் எடுத்துச்செல்லப்படும் இந்த உணவுப் பொருள்கள் அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும்.

முதற்கட்ட உணவுப் பொருள்களே இன்று எடுத்துச்செல்லப்படுகின்றன. தொடர்ந்து உதவிப் பொருள்களை எடுத்துச்சென்று விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உதவியளிக்க பாய்,

(14ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் நிலைப்பாடு: முக்கிய அறிவிப்பு நாளை

## கிளிநொச்சியில் செய்தியாளர் கூட்டம்

கிளிநொச்சி,மே20

**தற்போதைய அரசியல் நெருக்கடிகள் குறித்த தமது நிலைப்பாடு தொடர்பான முக்கிய அறிவிப்பை விடுதலைப் புலிகள் நாளை வெளியிடுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்த மாதம் 9, 10ஆம் திகதிகளில் ஜப்பான் தலைநகரில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் பங்கு பற்றுவதா இல்லையா? என்ற அவர்களது முடிவும் கூட நாளை தெரியவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

ஜப்பான் மாநாட்டில் பங்குபற்றக் கோரி விடுதலைப் புலிகளிடம் பன்னாட்டு சமூகம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகிறது.

இந்நிலையில், நாளைக் காலை 9 மணிக்கு கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டுகின்றார்.

இந்த மாநாட்டில் புலிகளின் முக்கிய அறிவிப்பு வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பான் மாநாட்டுக்கு விடுதலைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே 9 கோடி நிதியுதவி

கொழும்பு,மே20

தெற்கில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத வெள்ளப்பெருக்குக் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென நோர்வே அரசாங்கம் 9 கோடி ஐம்பது லட்சம் ரூபா அவசர நிதி உதவியை இலங்கைகு

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நடவடிக்கை

கொழும்பு,மே20

வெள்ளத்தால் வீடுகள் சேதமடைந்த குடும்பங்களுக்கு உதவுவதற்கெனவும் வீடுகளை மீள் நிர்மாணம் செய்வதற்கும் ஜனாதிபதி பத்துக் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளார் என அவரது ஊடக ஆலோசகர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்தார்.

அதேசமயம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென ஜனாதிபதி தனது நேரடி கண்

(14ஆம் பக்கம் பார்க்க)

# இன்றும் பரீட்சை இல்லை

கொழும்பு,மே20

தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் வெள்ளம் காரணமாக ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை இன்றும் நடைபெறமாட்டாது என்று கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அறிவித்திருக்கிறார். நேற்றும் இப்பரீட்சை நடைபெறவில்லை.

நேற்று நடைபெறவிருந்த பாடங்களுக்கான பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமையும், இன்று நடைபெறவிருந்த பாடங்களுக்கான பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டது.

வெள்ளம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலிருக்கும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை சுமார் 19 ஆயிரமாகும்.

# ராசிக் குழு உறுப்பினர் நேற்று சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு,மே20

மட்டக்களப்பு புதூரில் இராணுவ உத்தியோகத்தர் (ராசிக் குழு) கதிர்காமத்தம்பி நவஜூடம் இனம்தெரியாதோரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

புதூரில் உள்ள சலூன் ஒன்றில் இருந்தபோது வீதியில் வந்தவர்கள் இவரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தலைமறைவாகிவிட்டார்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர் - இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

# போராளிகள் குடும்பம் மீது நேற்றிரவு கிரனேட் தாக்கு!

## காயமடைந்த இருவர் மட்டு.வைத்தியசாலையில்

மட்டக்களப்பு, சேற்றுக்குடாவில் போராளிகள் குடும்பம் ஒன்றின் மீது நேற்று முன்னிரவு நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் இருவர் காயமடைந்தனர். வயோதிபரான தர்மலிங்கம் (வயது70), அவரது மகள் கிருபைராஜா ஆரியவதி(வயது45) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

மட்டக்களப்பு விமானப்படைத் தளத்துக்கு மிக அருகில் பாதுகாப்பு வலயத்தில் - உள்ள இவர்களது வீட்டின் பின்புறத்தால் வந்தவர்களே இந்தத் தாக்குதலை மேற்கொண்டார்

(14ஆம் பக்கம் பார்க்க)

### டோக்கியோ மாநாட்டில் வழங்கப்படும்

# உதவி நிதிகளைக் கையாள அதிகாரமுள்ள அமைப்பு அவசியம்

## கூட்டமைப்பு பிரதிநிதிகள் பிரதமர், ஹெல்கிஸனிடம் வலியுறுத்து

கொழும்பு,மே20

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, அபிவிருத்தி பணிகளுக்கு என டோக்கியோ மாநாட்டில் வழங்கப்படும் நிதியைக் கையாள அதிகாரமுள்ள கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பினர் பிரதமரிடமும் நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சரிடமும் வலியுறுத்தியுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் நோர்வே சமாதானக் குழுவின் தலைவர் விடர் ஹெல்கிஸனையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் தனித்தனியே சந்தித்த கூட்டமைப்புப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள வடக்கு - கிழக்குக்கான அதிகாரம் உள்ள கட்டமைப்பின் அவசியம் குறித்து எடுத்து விளக்கினர்.

ஒஸ்லோ மாநாட்டில் சர்வதேச சமூகம் வழங்கிய 7 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான நிதி உதவிகள் இன்னும் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட முடியாத நிலையே உள்ளது.

அந்த நிதியை கையாளக்கூடிய சட்டபூர்வமான அமைப்பாக 'சிரான்' அமைப்பு செயற்பட முடியாததே இதற்குக் காரணம். அதிகாரமுள்ள கட்டமைப்பு ஒன்று இல்லையெனின் டோக்கியோ மாநாட்டில் ஒதுக்கப்படும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.செயலகம் முன் இன்று வலி.வடக்கு மக்கள் மறியல்!

வலி.வடக்கு,மே20

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்களை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி இன்று காலை 7.30மணிக்கு யாழ்.செயலகம் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வலி.வடக்கு பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த அடையாள மறியல் போராட்டம் நண்பகலுடன் முடிவடையும்.

இன்றைய போராட்டத்தில் வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து ஏனைய பகுதிகளில் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

வலி.வடக்கில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி தொடராக நடத்தப்படவுள்ள போராட்டங்களில் முதலாவதே இன்றைய போராட்டமாகும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று தமிழ்ச்செல்வனைச் சந்திப்பர்

கிளிநொச்சி,மே20

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று இன்று காலை கிளிநொச்சிக்கு வரவிருக்கின்றது.

தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் கலந்துரையாட இருக்கின்றனர்.

கொழும்பில் நோர்வே சமாதானக் குழுவின் தலைவர் விடர் ஹெல்கிஸன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் நேற்று நடத்திய பேச்சுக்கள் குறித்து கூட்டணிக் குழுவினர் தமிழ்ச்செல்வனுக்கு விளக்கம் அளிக்க இருக்கின்றனர். (ம-3-4)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மேலும் சில தாழ்ந்த பகுதிகளிலும் வெள்ளம்:

# கங்கைகளின் கரையோர மக்களை வெளியேற செயலாளர்கள் அறிவிப்பு

கொழும்பு,மே20

தென்னிலங்கையில் ஏற்கனவே பாதிக்கப்பட்ட பிரதேசங்களை விட மேலும் சில தாழ்ந்த பகுதிகளிலும் புதிதாக வெள்ளம் ஏற்பட்டிருக்கின்றது. பெருவெள்ளம் ஏற்பட்டிருந்த சில பிரதேசங்களிலிருந்து வெள்ளம் வடியத் தொடங்கியிருப்பதால் வெள்ளம் வடிந்தோடும் பகுதிகளிலுள்ள தாழ்ந்த பகுதிகளிலேயே புதிதாக வெள்ளம் பாய்ந்திருக்கிறது.

களுகங்கை, நில்வளகங்கை, ஜின் கங்கை ஆகியவற்றில் வெள்ள நீர் பாய்வதால் அவற்றின் கரையோரங்களிலுள்ள தாழ்ந்த இடங்களின் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறு சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் செயலாளர்கள் அறிவித்துள்ளனர்.

இரத்தினபுரி நகரை மூழ்கடித்த வெள்ளம் தொடர்ந்து வடிந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது. ஆயினும், அம்மாவட்டத்திலுள்ள நயகம, தெனியாவ, எலபாத்த, கரங்கொட ஆகிய பிரதேசங்கள் தொடர்ந்து வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

காலி மாவட்டத்தில் உடுகம, தவலம, வெலிவிட்டிய, நெலுவ ஆகிய பிரதேசங்கள் தொடர்ந்து வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன. ஹினிதும வைத்தியசாலைக்குள்ளும் வெள்ளம் புகுந்திருக்கிறது.

ஜின் கங்கையின் வெள்ளம் தாழ்ந்த பிரதேசங்களை நோக்கிப் பாய்வதால் பத்தேகம நகரமும் வெள்ளத்தில் மூழ்கும் ஆபத்து இருப்பதாகக் கூறப்பட்டது.

களுகங்கையில் பாயும் வெள்ளத்தை விரைந்து கடலில் பாயச் செய்வதற்காக அதன் முகத்துவாரம் மேலும் அகலமாக்கப்பட்டு வருகிறது.

புலத்சிங்கள, பதுரலிய, மதுராவல, வலல்லாவிட்ட, இங்கிரிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மாத்தறை மாவட்டத்தில் மாலிம்பிட, திஹகொட பிரதேச செயலகப் பிரிவுகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் மாத்தறை நகரமும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக மாத்தறை பதில் மாவட்ட செயலாளர் காமினி ஜயசேகர தெரிவித்திருக்கிறார்.

மாத்தறை பொலீஸ் நிலையம், வைத்தியசாலை ஆகியவற்றின் வளவுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்திருக்கிறது. நகரை அண்டிய சில கிராமங்களும் வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன.

மாத்தறை மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் அகதிகளாயிருக்கின்றனர். வெள்ள அனர்த்தம் நீடிப்பதால் அகதிகளானோருக்கு நிவாரண உதவிகள் வழங்குவதில் சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் பதில் மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

### நாடாளுமன்றத்தில் இன்று வெள்ள அனர்த்த அறிக்கை

நாடாளுமன்றம் இன்று காலை 10மணிக்கு மீண்டும் கூடும்.

தகவல் தொழில்நுட்ப சட்டமூலம் மீதான விவாதம் இன்று நடைபெறும். நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் இன்று சபையில் விசேட அறிக்கையொன்றை விடுக்கவிருக்கிறது.

### புதிய முத்திரை வெளியீடு

முதலாவது முஸ்லிம் சபாநாயகரான பாக்கீர் மாக்கார் எச்.எஸ். இஸ்மாயிலின் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு விழா புத்தளம் நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஞாபகார்த்த முத்திரையையும் முதல் நாள் உறையையும் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வெளியிட்டு வைத்தார். முதலாவது முத்திரையையும் தபால் உறையையும் அவர் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு வழங்கினார். பாக்கீர் எச்.எஸ். இஸ்மாயில் புலமைப் பரிசில் நிதியமும் இந்நிகழ்ச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

### ஓட்டோ சாரதிகள் மறியல்!

மட்டக்களப்பு பார் வீதியில் வைத்து ஓட்டோ சாரதியொருவர் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து நூற்றுக்கணக்கான ஓட்டோ சாரதிகள் நேற்று மட்டக்களப்பு நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விபத்தொன்றில் காயமடைந்த ஒருவரை வைத்தியசாலைக்கு ஏற்றிச் செல்லுமாறு பொலீஸார் ஓட்டோ சாரதியைக் கேட்டனர் எனவும் அதற்கு அவர் மறுத்ததால் முறுகல் நிலை ஏற்பட்டது எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

ஓட்டோ சாரதி இது பற்றி தெரிவிக்கையில், தனது சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பொலீஸார் பறித்தெடுத்து தன்னைத் தாக்கினர் எனத் தெரிவித்துள்ளார்.

# மண்ணெண்ணெய் லீற்றர் ரூ. 100 கோதுமை மா கிலோ 50 ரூபா!

## போக்குவரத்து இல்லாத பகுதிகளில் விலைகள் உயர்வு

கொழும்பு,மே20

வெள்ளம், மண்சரிவு காரணமாக போக்குவரத்து துண்டிக்கப்பட்ட பகுதிகளில் உணவுப் பொருள்கள், எரிபொருள் ஆகியவற்றின் விலைகள் பலமடங்கு அதிகரித்துள்ளன.

ஏனைய பகுதிகளிலிருந்து போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருக்கும் இறக்குவானை நகரில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் நூறு ரூபாவாகவும் கோதுமை மா கிலோ ஐம்பது ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை, ஏனைய உணவுப் பொருள்களின் விலைகளும் பலமடங்கு அதிகரித்துள்ளன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. குழந்தை பால்மாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புத்தளத்தில் மாணவன் குத்திக்கொலை! இரு மாணவர்கள் பொலீஸில் சரண்!!

இரு மாணவர்களுக்கிடையே எழுந்த குரோதம் ஆயுதத் தாக்குதலில் முடிவடைந்தது. இதில் 20வயதுடைய முஹம்மது பாருக் முஹம்மது பஹ்ரான் என்னும் மாணவர் மரணமானார்.

இச்சம்பவம் கடந்த 17ஆம் திகதி புத்தளம் நகரிலுள்ள மஸ்ஜித் வீதி வெட்டுக்குளம் அருகில் இடம்பெற்றது.

காலஞ்சென்ற மாணவன் கடந்த வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார். அவரது மார்பில் கூரிய ஆயுதமொன்றினால் குத்தப்பட்டதால் இருதயம் நேரடியாகப் பாதிக்கப்பட்டு மரணமேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரைக் குத்தியவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மாணவர்களைத் தேடி பொலீஸார் வலைவிரித்துள்ளனர். அந்த நேரத்தில் இரு மாணவர்கள் பொலீஸில் சரணடைந்துள்ளனர்.

மரண விசாரணையை புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் என்.டன் பொன்சேகா நடத்தினார். (ம-3)

# தேசிய முன்னணி அமைப்பது குறித்து சு.க. - ஜே.வி.பி. இறுதி இணக்கம்

கொழும்பு,மே20

தேசிய முன்னணி அமைப்பது தொடர்பாக சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுக்களில் இறுதி இணக்கம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த இணக்கம் குறித்து சுதந்திரக் கட்சி அதன் தலைவியான ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அறிவிக்கும். அவ்வாறே, எதிர்வரும் 23ஆம் திகதி கூடும் ஜே.வி.பி. மத்திய குழுக் கூட்டத்தில் அந்த இணக்கம் முன்வைக்கப்படுமென விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுக்களில் தேசிய முன்னணி எதிர்வரும் தேர்தலுக்கு முகங்கொடுக்கும் விதம், பொதுவான தேர்தல் சின்னம் ஆகியன குறித்தும் ஆராயப்பட்டன. ஆயினும் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

இருதரப்பினரும் இவை குறித்து இன்று மீண்டும் கூடிப் பேசுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# அரசியல்வாதிகளை மாலை அணிவித்து வரவேற்போர் அல்லர் அரியாலை மக்கள்

## யாழ். அரச அதிபர் உரை

யாழ்ப்பாணம்,மே20

அமைச்சர்களையோ, எம்.பிக்களையோ மாலை அணிவித்து வரவேற்பவர்கள் அல்லர் அரியாலை மக்கள். இத்தகைய தன்மைதான் இந்தப் பகுதி இன்றும் பின்தங்கிய நிலையில் இருப்பதற்குக் காரணம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன்.

நல்லூர் பிரதேச செயலகத்தின உப அலுவலகத் திறப்பு விழா அண்மையில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசஅதிபர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்ட காலம்முதல் அரியாலை பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனால் அரியாலை கிழக்குப் பகுதி மக்கள் சுமார் நான்கு மைல் வரையிலான திருநெல்வேலி சென்று அங்கு இயங்கும் நல்லூர் பிரதேச செயலகத்தில் தமது கடமைகளை நிறைவேற்றவேண்டிய நிலை ஏற்பட்டது.

நான் அரச அதிபராகப் பதவி யேற்றபோது அரியாலையின் பல பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத நிலையும் காணப்பட்டது. தற்போது அரியாலைப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்தும் 24 வீடுகளில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த அலுவலகம் மூலம் மக்களின் நீண்டகால குறையில் ஒரு பகுதி தீர்த்துவைக்கப்பட்டுள்ளது.

அரியாலையைப் பொறுத்தவரையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேவை செய்யாமலேயே குறிப்பிட்ட ஒரு கட்சி வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலையும் காணப்படுகின்றது. ஆகவே, மக்கள் வாக்களித்த கட்சியினிடம் தமக்குரிய உரிமைகளைக் கேட்டுப்பெற்றுக் கொள்ளவேண்டும் - என்றார். (எ)

## வடக்கு-கிழக்கில் நடைபெறவுள்ள

# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக வெள்ளியன்று கொழும்பில் கூட்டம்

## உள்ளூராட்சி சபைச் செயலாளர்கள் பங்குபற்றுவர்

யாழ்ப்பாணம்,மே20

அடுத்த மாதம் 23ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக ஆராய்வதற்கென யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி அமைப்புகளின் செயலாளர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் உட்பட அனைத்து பிரதேச சபைகளின் செயலர்களும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பு, ராஜகிரியவில் உள்ள தேர்தல் திணைக்களத்தில் இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தும் சூழல் இருக்கின்றதா என்றும் அடுத்த மாதத்தில் தேர்தல் நடத்துவதாக இருந்தால் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வது பற்றியும் முக்கியமாக கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-8)

# முதலாவது சமுர்த்தி வங்கிக்கு விரைவில் நிரந்தரக் கட்டடம்

யாழ்ப்பாணம்,மே20

தற்போது மருதங்கேணியில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவரும் யாழ்.குடாநாட்டின் முதலாவது சமுர்த்தி வங்கியை நிரந்தரக் கட்டடம் ஒன்றில் இயக்குவதற்கென முன்னேற்பாட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இச்சமுர்த்தி வங்கிக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கென 10 லட்சம் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது.

இக்கட்டடத்தை விரைவில் அமைத்து முடிப்பதற்கென மருதங்கேணி சந்திக்கும் தாளையடிக்கும் இடையிலான பிரதான வீதியில் அரச காணி ஒன்றும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணிகள் பூர்த்தியானதும் வங்கி நிரந்தரக் கட்டடத்தில் இயங்க ஆரம்பிக்கும். (ம-8)

# குமார் கொலைச் சந்தேக நபரான மொறட்டுவ சமன் சுட்டுக்கொலை!

குமார் பொன்னம்பலத்தைக் கொலை செய்தவர் எனச் சந்தேகிக்கப்பட்ட பிரபல பாதாள உலகக் கோஷ்டித் தலைவரான மொறட்டுவ சமன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மொறட்டுவ, திகாருல்ல பாலத்திற்கு அருகே நேற்றுமுன்தினம் இரவு 9.15 மணியளவில் இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என மொறட்டுவ பொலீஸார் தெரிவித்தனர்.

மொறட்டுவப் பகுதியில் தனது சொந்தச் செலவில் பிரமாண்டமான வெசாக் பந்தல் ஒன்றை அவர் அமைத்திருந்தார். அப்பந்தல் அருகே இருந்து தனது வாகனத்தில் பாணந்துறை நோக்கிச் சென்ற அவரை பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் இவரைச் சுட்டுக்கொன்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தின் போது ஓட்டோ ஒன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்த பெண்ணொருவரும் படுகாயமடைந்துள்ளார்.

இதற்கு முன்னரும் மொறட்டுவ சமனை தலங்கமை சந்தியில் வைத்துக் கொல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதிலிருந்து அவர் தப்பிக்கொண்டார்.

மொறட்டுவ, பாணந்துறைப் பொலீஸார் இக்கொலை குறித்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# மிதிவெடி அபாயம் குறித்து படையினர் பிரசுர விநியோகம்

சாவகச்சேரி,மே20

பாதுகாப்புப் படையினர் தென்மராட்சிப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு மிதிவெடி அபாயம் தொடர்பான அறிவுறுத்தல் அடங்கிய துண்டுப்பிரசுரத்தை வெசாக் தினத்தன்று விநியோகித்தனர்.

அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:-

உங்கள் வீடுகளில், தோட்டங்களில், சுற்றாடலில் வெடிபொருள்களையோ யுத்தத்திற்காக பாவிக்கப்பட்ட ஆயுதங்கள் அல்லது சந்தேகத்திற்கிடமான பொருள்களையோ கண்டால் அவற்றைத் தொடாதீர்கள். இவ்வாறான வெடிபொருள்கள் இருக்கும் இடங்கள் தொடர்பான தகவல்களை அருகேயுள்ள படைமுகாமுக்குத் தெரியப்படுத்துங்கள். வெடிபொருள்கள் உள்ள இடத்துக்கு பிறரைச் செல்ல அனுமதிக்காதீர்கள்.

பாதுகாப்பற்ற பிரதேசங்களின் சுற்றாடல்களை துப்புரவு செய்தல், அவ்விடங்களில் நெருப்பு வைத்தல் போன்றவற்றை தவிர்த்துக்கொள்ளுங்கள் - என்றுள்ளது.

இப்பிரசுரம் வெசாக் தினத்தன்று வெசாக் கூடுகளை பார்வையிடச் சென்ற பொதுமக்களுக்கு படையினரால் விநியோகிக்கப்பட்டது. (ஓ-31)

### அமைச்சருக்கு 'இந்துமத ஜோதி' பட்டம் வழங்கப்பட்டது

இரண்டாவது உலக இந்து மாநாட்டினையொட்டி இணுவிலில் இடம்பெற்ற பிராந்திய நிகழ்வொன்றில் இந்துசமய விவகார அமைச்சர் மகேஸ்வரனுக்கு 'இந்துமத ஜோதி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இச்சிறப்புப் பட்டத்தினை இணுவிலைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவில் மண்டபத்தில் வைத்து வழங்கின. இப்பட்டத்தினை அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். (ம-49)

# யாழ்.நகரின் மத்தியில் கழிவுகளால் துர்நாற்றம்

கொழும்புத்துறை,மே20

யாழ். ரயில் நிலைய வளவின் அருகே பின்புறமாக - அத்தியடிப் பகுதியில் கொட்டப்படும் குப்பைகளாலும் இறந்த மிருகங்களின் உடற் பகுதிகளாலும் கடும் துர்நாற்றம் வீசிவருகின்றது. அத்துடன் சுகாதாரச் சீர்கேட்டையும் ஏற்படுத்தி வருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஸ்ரான்லி வீதி வழியாகச் செல்லும் மக்கள் இந்த இடத்தைத் தாண்டிச் செல்லும்போது சகிக்கமுடியாத துர்நாற்றத்தால் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்வதைக் காணமுடிகின்றது.

இதுகுறித்து யாழ் மாநகர சபை அதிகாரிகளுக்கு பல தடவைகள் முறையிட்டபோதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. நகரின் மத்தியில் பொதுச் சுகாதாரத்துக்கு சீர்கேடு விளைவிக்கும் வகையில் கொட்டப்படும் இக்கழிவுகள் குறித்து சுகாதார அதிகாரிகளும் கவனமெடுக்கவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இது விடயத்தில் அதிகாரிகளின் விரைவான நடவடிக்கையை மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். (ம-30)

### அமைதிப் பேச்சு முறிவடைந்ததால்

# ஆச் விடுதலை போராட்டத்தை நசுக்க இந்தோனேசியா படை நடவடிக்கை!

ஜகார்த்தா,மே20

இந்தோனேசியாவில் பிரிவினை கோரிப் போராடிவரும் ஆச் தீவிரவாதிகள் மீது இந்தோனேசிய அரசு நேற்று பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

சுதந்திர ஆச் இயக்கத்தினரின் நிலைகள் மீது யுத்த விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கிவருகின்றன. இதேசமயம், தீவிரவாதிகளின் கட்டுபபாட்டில் உள்ள பகுதிகளில் இந்தோனேசிய இராணுவம் 'பரசூட்' மூலம் இறங்கி போரிடுகின்றது.

இந்தோனேசியாவில் சில மாகாணங்களில் சுதந்திரம் கோரி போராட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. இந்தோனேசியாவின் ஆக்கிரமிப்பிலிருந்து 1999 ஆம் ஆண்டு கிழக்குத் திமோர் சுதந்திரம் அடைந்ததையடுத்து இந்த மாகாணங்களிலும் சுதந்திரப் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

இவற்றில் ஆச் மக்களின் போராட்டம் சமீபகாலமாக உச்சக் கட்டத்தையடைந்திருந்தது. இதனையடுத்தே இந்தோனேசிய அதிபர் மேகவதி சுகர்னோ புத்ரி ஆச் பிரதேசத்தில் பாரிய இராணுவ நடவடிக்கையை நடத்த உத்தரவிட்டுள்ளார். இதுவரை காலமும் ஆச் மக்களின் போராட்டத்தை அடக்க மறைமுக இராணுவ நடவடிக்கைகளே இடம்பெற்றுவந்தன. ஆனால், நேற்று அதிகாலை பகிரங்கமாக யுத்த எடுப்பில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆச் தீவிரவாதிகள் அதிகம் உள்ள இடமாகக் கருதப்படும் லோக்செமாவெ என்ற பகுதியில் 'பரசூட்' மூலம் ஏராளமான இராணுவத்தினர் தரையிறங்கியுள்ளனர். போர் விமானங்களும் அப்பகுதியில் கடும்தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன. இதேசமயம், 'இந்தோனேசிய அரசு' ஆச் மக்களுடன்போரைத் தொடர விரும்பினால நாம் தயாராகவே இருக்கின்றோம்' என்று ஆச் தீவிரவாத இயக்கத் தலைவர் மஹ்மூட் மாலிக் தெரிவித்தார்.

இந்தோனேசிய இராணுவத்தின் கொடூரம் குறித்து ஆச் பொது மக்கள் அஞ்சிக் கொண்டிருப்பதாக அங்குள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தோனேசிய அரசுக்கும் ஆச் விடுதலை இயக்கத்துக்கும் இடையே கடந்த வாரம் சமாதானப் பேச்சு இடம்பெற்றது.

ஆனால், உடன்பாடு எட்டப்படாமலேயே நேற்றுமுன்தினம் அப்பேச்சு முறிவடைந்தது. இதனையடுத்தே நேற்று இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இந்தோனேசிய அரசு ஆச் பிரதேசத்துக்கு தன்னாட்சி உரிமை வழங்கத் தயாராக இருந்ததாகவும் - ஆனால் தமக்கு பூரண சுதந்திரமே வேண்டுமென ஆச் விடுதலை இயக்கத்தினர் தெரிவித்ததாகவும் -

இதனாலேயே பேச்சு முறிவடைநததாகவும் - கூறப்படுகிறது. (ஓ)



# காஷ்மீரில் தீவிரவாதிகள் 6 பேரைக் கொன்றனர்!

ஜம்மு,மே20

இந்தியாவின் ஜம்முகாஷ்மீரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர். உயிரிழந்தவர்களில் 4பெண்களும் 2சிறுவர்களும் அடங்குவர்.

இச்சம்பவம் ரஜௌரி மாவட்டத்திலுள்ள சோவயன்கோட்தாரி கிராமத்தில் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் நிகழ்ந்தது.'

இக்கிராமத்தில் வசித்த மெஹ்மூத் குஜ்ஜார் என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பாதுகாப்புப் படையிலும் மற்றொருவர் சிறப்பு போலீஸ் அதிகாரியாகவும் பணியாற்றி வருகின்றனர். அவர்களைச் சுட்டுக் கொல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் மெக்மூத் குஜ்ஜார் வீட்டில் தீவிரவாதிகள் நுழைந்தனர்.

அவ்விருவரும் அங்கு இல்லாததால் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த கத்தூன் பேகம், ஹனீபா பேகம், ஜகீரா பேகம், தாஜ் பேகம், இர்ஷாத் அகமது, மருப் அகமது ஆகிய 6 பேரையும் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்று விட்டு தப்பியோடிவிட்டனர்.

தப்பியோடிய தீவிரவாதிகளை பொலீஸாரும் பாதுகாப்புப் படையினரும் தேடிவருகின்றனர். (ஓ)

# அல்கெய்டாவின் பட்டியலில் ஆறு நாடுகளின் பெயர்கள்

லண்டன்,மே20

சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடனின் அல் கெய்டாவின் தாக்குதல் பட்டியலில் ஜோர்டான், மொராக்கோ, நைஜீரியா, சவூதி அரேபியா, யேமன் மற்றும் பாகிஸ்தான் ஆகிய 6 நாடுகள் உள்ளதாக பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஒசாமா பின்லேடனால் 3மாதங்களுக்கு முன்பு வெளியிடப்பட்ட ஒலிநாடாவில் இது தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

ஈராக் மீதான போருக்கு ஆயத்தமாவதிலேயே கவனம் செலுத்தியதால் இந்த எச்சரிக்கையை மேற்கத்திய புலனாய்வு அமைப்புக்கள் பெரிதுபடுத்தாமல் விட்டுவிட்டதாக லண்டனிலிருந்து வெளியாகும் 'சண்டே டைம்ஸ்' இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

'விடுதலைக்கு தயார்' என்ற பெயரிலான அந்த ஒலிநாடாவில் இஸ்லாமிய தீவரவாதிகளை உயிர்த்தியாகத்துக்கு தயாராகுமாறு ஒஸாமா பின்லேடன் அறைகூவல் விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## இந்திய தலைநகரில் வெடிபொருள் மீட்பு!

புதுடில்லி,மே20

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் அதிக பாதுகாப்புள்ள பகுதியில் துப்பாக்கி குண்டுகள் அடங்கிய பையை பொலீஸார் கண்டெடுத்தனர்.

ராஜ்பாத் - ஜன்பாத் சந்தியில் இருந்த அந்தப் பையில் ஏகே 47 துப்பாக்கியில் பயன்படுத்தும் குண்டுகள், கைத்துப்பாக்கியில் பயன்படுத்தும் குண்டுகள் இருந்தன.

இந்திய மத்திய வங்கி, நாடாளுமன்றம், 'இந்தியா கேட்' ஆகிய இடங்களில் தற்கொலைப் படையினர் தாக்குதல் நடத்த பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர்இதொய்பா தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாகவும் இந்தியப் பொலீஸார் தெரிவித்தனர். (ஓ)



சீனாவில் சார்ஸ் நோய் பரவியிருப்பதால் தலைநகர் பெய்ஜிங்கில் திருமணமான மணமகனும், மணப்பெண்ணும் மூகமூடி அணிந்து முத்தம் பரிமாறிக் கொள்கின்றனர்.

# பெற்ற தாயே ஏலம்போட்டு குழந்தையை விற்ற கொடுமை!

ரோம்,மே20

மருத்துவத் துறையில் ஏற்படும் வளர்ச்சி ஒரு பக்கம் பெருமைப்படவைக்கிறது. ஆனால், அந்த வளர்ச்சி தவறான பாதைக்குத் திரும்பும் போதுதான் வேதனையாக மாறுகிறது.

சிறுநீரகம், ஈரல், இதயம் போன்ற முக்கிய உறுப்புகள் பாதிப்பு அடைந்த குழந்தைகளுக்கு இன்னொரு குழந்தையிடம் இருந்து நல்ல உறுப்புகளை எடுத்து பொருத்த முடியும். மருத்துவ உலகில் ஏற்பட்டுள்ள இந்த முன்னேற்றம் மனித உறுப்புகளை விலைக்கு விற்கும் வியாபாரத்துக்கு வழிவகுத்து விட்டது. மனித உறுப்புகளுக்காக குழந்தைகள் கடத்தலுக்கும் வழிவகுத்தது.

இப்போது பெற்ற தாயே குழந்தையை ஏலம்போட்டு விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ரோம் நகரில் உள்ள பாரி துறைமுக நகரைச் சேர்ந்த ஒரு தாய் தான பெற்ற குழந்தையை ஏலம்போட்டு விற்பனை செய்து இருக்கிறார். 1 கோடியே 20 லட்சம் ரூபாய்க்கு இந்தக் குழந்தை ஏலம் போனது.

இந்தக் குழந்தை தாயின் வயிற்றில் கருவாக இருக்கும்போதே அதை விற்பனை செய்யப்போவதாக அந்த தாய் பேரம் பேசி விட்டார். அந்தக் குழந்தையை ஏலத்தில் எடுக்க நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு ஏராளமானவர்கள் முன்வந்தனர்.

குழந்தைகள் விற்பனையை தடுக்கும் பொலீஸாரும் மாறுவேடத்தில் இந்த ஏலத்தில் கலந்துகொண்டனர். முடிவில் மாறுவேடத்தில் வந்த பொலீஸாரே அதை ஏலத்தில் எடுத்தனர். குழந்தை இல்லாத தம்பதிகள் என்ற போர்வையில் பொலீஸார் இந்த ஏலத்தில் கலந்துகொண்டனர்.

குழந்தை பிறப்பதற்கு 5 மாதங்களுக்கு முன்பே இந்த ஏலம் முடிந்துவிட்டது. குழந்தை பிறந்த ஒருசில நிமிடங்களில் அந்த குழந்தை ஏலம் எடுத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அப்போது அந்தக் குழந்தையின் 28 வயது தாய், அவரது கணவர் மற்றும் ஒரு கார் சாரதி ஆகியோரை பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

# பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் மீது அழுத்தத்தை அதிகரிக்கிறது இஸ்ரேல்

லண்டன்,மே20

ஜெருசலேமில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 7 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் மீதான அரசியல் அழுத்தத்தை இஸ்ரேல் அதிகரித்துள்ளது.

வெளிநாட்டு ராஜதந்திரிகளோ, அரசியல் தலைவர்களோ அரபாத்தை சந்திக்க முடியாதுள்ளதாகவும் -

அரபாத்தைச் சந்திக்க அனுமதி பெறச் செல்பவர்களை இஸ்ரேலிய அதிகாரிகள் சந்திக்க மறுப்பதே இதற்குக் காரணம் என்றும் -

கூறப்படுகிறது.

இதேவேளை, மேற்குக்கரை மற்றும் காஸாவுக்கான தனது எல்லைப் பிரதேச நுழைவாயில்களை இஸ்ரேல் மூடிவிட்டது. இதனால், பலஸ்தீனர்கள் இஸ்ரேலுக்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ முடியாதுள்ளீது. இதனால், இஸ்ரேலியப் பகுதிக்கு அன்றாடம் சென்று கூலித்தொழிலில் ஈடுபட்ட பலஸ்தீனர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இதற்கிடையில் நேற்று காஸாவில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் இஸ்ரேலிய இராணுவத்தினர் மூவர் பலத்த காயமடைந்தனர்.

கபார் டரோம் என்ற யூதக்குடியிருப்பின் அருகே பாதுகாப்புப் பணியில ஈடுபட்டிருந்த இஸ்ரேலியப் படையினர் அருகே, சைக்கிளில் வந்து இறங்கிய பலஸ்தீனர் ஒருவர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்க வைத்துத் தாக்குதல் நடத்தினார். இதில் இஸ்ரேலிய இராணுவத்தினர் மூவர் படுகாயமடைந்தனர்.

அடுத்தடுத்து இடம்பெற்றுவரும் தற்கொலைத் தாக்குதல்களால் அமெரிக்கா முன் வைத்துள்ள அமைதித் திட்டத்தை முன்னெடுப்பதில் நெருக்கடி தோன்றியுள்ளது.

இந்த அமைதித் திட்டத்தின் முதற் கட்டம், தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருதல், பலஸ்தீனர்களின் வாழ்க்கையில் இயல்பு நிலையை தோற்று வித்தல் அரசியல் மறுசீரமைப்பு, பலஸ்தீனப் பிரதேசத்திலிருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறுதல், பலஸ்தீனத் தேர்தல் ஆகியவை அடங்குகின்றன.

இரண்டாம் கட்டத்தில் சுதந்திர பலஸ்தீன நாட்டை உருவாக்குதல், சர்வதேச மாநாட்டைக் கூட்டுதல், இத்திட்டம் தொடர்பான முறைப்பாடுகளைக் கண்காணிக்கக் குழு அமைத்தல் ஆகியவையும் -

மூன்றாம் கட்டத்தில் இரண்டாவது சர்வதேச மாநாட்டை கூட்டுதல், ஜெருசலேம், அகதிகள், யூதக் குடியிருப்புகள் எல்லைகள் குறித்த நிரந்தர உடன்பாட்டை எட்டுதல் ஆகியவையும் அடங்கியுள்ளன.

இம் மூன்று கட்டங்களும், முறையே இம்மாத இறுதிக்குள்ளும், எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள்ளும், அடுத்த இரண்டு ஆண்டுகளுககுள்ளும் செயற்படுத்த காலவரையறை விதிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், இத்திட்டத்தில் இஸ்ரேலுக்குச் சாதகமான விடயங்களை நிறைவேற்றுவதிலேயே அமெரிக்கா அக்கறை காட்டி வருவதாகவும் -

இஸ்ரேலிய இராணுவ அத்து மீறல்களை கவனத்தில் எடுக்காத அமெரிக்கா பலஸ்தீனர்களின் பதிலடியை தீவிரவாதமாகக் குறிப்பிடுவதாகவும் -

பலஸ்தீன விடுதலை இயக்கங்கள் குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஓ)



தாய்லாந்தின் பாங்காக் நகருக்கு கிழக்கே உள்ள சோன்பரி பகுதியில் உள்ள கேளிக்கை பூங்காவில் தினமும் இந்த சிறுமி தனது தலையை முதலையின் வாய்க்குள் திணித்து சாகச நிகழ்ச்சி நடத்துகிறார். இந்த சாகச நிகழ்ச்சியை பார்க்கும் சுற்றுலா பயணிகள் கொடுக்கும் பணத்தில்தான் இவரது வாழ்க்கை நடக்கிறது.

சார்ஸ் நோய் பாங்கரக்கில் வேகமாக பரவி வருவதை தொடர்ந்து சுற்றலா பயணிகள் வருகை குறைந்துவிட்டது. இதன்ால் இவரது வருமானமும் இப்போது 56 சதவீதம் குறைந்துவிட்டது.

# எவரெஸ்ட் சாதனை பொன்விழா

உலகிலேயே மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் சிகரத்தின் மீது எட்மண்ட்ஹிலாரி, மற்றும் டென்சிங் ஆகியோர் முதல் முதலாக ஏறி சாதனை படைத்தனர். இந்த சாதனை ஏற்படுத்தப்பட்ட 50 ஆவது ஆண்டு பொன்விழா அடுத்த வாரம் நடைபெறுகிறது.

இதையொட்டி நேபாள அரசு எட்மண்ட்ஹிலாரிக்கு அந்த நாட்டின் சிறந்த குடிமகன் என்ற விருதை வழங்குகிறது. இந்த பொன்விழாவில் 83 வயது எட்மண்ட்ஹிலாரி உட்பட ஆயிரக்கணக்கான மலையேற்ற வீரர்கள் கலந்துகொள்கிறார்கள். சிறந்த கௌரவ குடிமகன் பட்டம் வெளி நாட்டவர் ஒருவருக்கு நேபாள அரசு வழங்குவது இதுவே முதன்முறையாகும்.

# BOXER

**கண்கவர் தோற்றம், சிக்கனம் மற்றும் உயர்தொழில்நுட்பத்தில் என்றும் முன்னணியில்**

இன்றைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள உங்களுக்கான சிறந்த முதலீடு BOXER.

நம்பிக்கை மற்றும் தரத்திற்குப் பெயர் போன நிறுவனத்தினால் சந்தைப்படுத்தப்படும் BOXER உங்கள் தெரிவுக்கேற்ற மோட்டார் சைக்கிளாக இருப்பதால் மேலும் சிறந்த வளம் மிக்க எதிர்காலத்திற்கு இதிலே சவாரி செய்யுங்கள்.

இப்போது BOXER CT DX மேம்பாடான சக்திக்கும் எரிபொருள் சிக்கனத்திற்கும் K-tec தொழில்நுட்பவியல் சகிதம்.




தன்னிகரற்ற உத்தரவாதம்

**பஜாஜ்** இலங்கையில் முன்னணியாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

- சக்திவாய்ந்த4 ஸ்ட்ரோக் 100cc என்ஜின் - K-tec தொழில்நுட்பவியலை பக்கபலமாக கொண்டு 7.02-7.7 BHP வரை அபாரமான செயற்திறன் கொண்டது.
- கரடு முரடான பாதைப் பயணத்துக்கு உறுதிவாய்ந்த வலுப்படுத்தப்பட்ட டபிள் கிரேடில் அடிச்சட்டகம்.
- பாதுகாப்பான சவாரிக்கு சக்திவாய்ந்த 35/35W முன்விளக்கு.
- இப்போது சாதாரண சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 91 கி.மீ ஓடக்கூடிய எரிபொருள் சிக்கனம் கொண்டது.

**Boxer இப்போது AT, CT மற்றும் CT Deluxe மாதிரிகளில்.**

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.**

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 பெக்ஸ் : 074-700677, 687175 ஹொட்லைன் : 074-715050

**அதிகாரம் பெற்ற விற்பனையாளர்கள் :** குறிஞ்சி ரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 0777-626919
குறிஞ்சி ரேடர், 6, நவீன சந்தை, சாவகச்சேரி. தொலைபேசி : 0777-626919

Mel Ads

உதயன்

## வீழ்ச்சியுறும் கல்வியை மீட்சியுறச் செய்வோம்!

யாழ.மாவட்டத்தின் கல்வித் தரம் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது குறித்து வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் கவலையும் விசனமும் தெரிவித்திருக்கின்றார்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ். மாவட்ட அலுவலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய சமயமே இந்தக் கவலையை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

தமது ஏனைய அதிகாரிகள் சகிதம் குடாநாட்டில் நான்கு நாள்கள் தங்கி நின்று, பல்வேறு பாடசாலைகள், கல்வி அலுவலகங்கள் ஆகியவற் றுக்கு நேரில் விஜயம் செய்து, பல தரப்பினருடனும் உரையாடி, நிலைமையைக் கணிப்பிட்ட பின்னரே இவ்வாறு அவர் கூறியிருக்கின்றார்.

பேரழிவை ஏற்படுத்திய போரழிவுகளுக்கு மத்தியிலும் தமிழர்தம் அழிவிலாச் சொத்து கல்வியே என்று இவ்வளவு காலமும் இறுமாந்திருந்தோம்.

தமிழர்களைப் பொறுத்தவரை அந்தக் கல்விக்குக் கலங்கரை விளங்கமாகத் திகழ்ந்த பிரதேசங்களுள் ஒன்று யாழ்ப்பாணம். இங்கேயே அந்த அழியாச் சொத்துக்கு ஆபத்து வந்திருக்கின்றது என்ற அபாயச் சங்கை ஒலித்திருக்கின்றார் மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

"ஒரு காலத்தில் கல்வியில் உச்ச நிலையில் இருந்த யாழ்.மாணவர்கள் இப்போது மிகவும் கீழே இறங்கி வந்துவிட்டனர். கணனிக்கல்வி, ஆங்கிலக் கல்வி போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்த வேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர். ஏனைய இடங்களில் உள்ள மாணவர்களோடு ஒப்பிடும்போது யாழ்.மாணவர்கள் இத்துறைகளில் மிகவும் பின்நிற்கின்றனர். கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களிலும் அவர்கள் முன்னேற வேண்டியுள்ளது" - இப்படி அவதானங்களை வெளியிட்டிருக்கின்றார் மாகாண கல்விப் பணிப்பாளர்.

தமிழ்ப் பிரதேசங்களின் கல்வி நிலை வீழ்ச்சிக்கு யுத்தமும் அதன் பாதிப்புக்களும் அடிப்படைக் காரணம் என்று சுட்டிக்காட்டும் அவர், இந்த வீழ்ச்சியிலிருந்து தமிழ்ப் பிரதேசங்களை மீட்க தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையுடன் இணைந்து, அதன் வழிகாட்டுதலுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்திருக்கின்றார். இந்த முயற்சிக்கு யாழ்.பல்கலைக்கழகமும் கல்விசார் அதிகாரிகளும் துணை நிற்க வேண்டும் என்றும் அவர் கோரியிருக்கின்றார்.

இதேபோன்ற கோரிக்கை கிழக்கிலங்கையிலிருந்தும் எழுந்திருக்கின்றது. கடந்த வாரம் காரைதீவு சண்முக வித்தியாலயத்தில் முக்கிய கல்வியாளர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது. அங்கு உரையாற்றிய புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை பிராந்திய தனியார் கல்வித் துறைப் பொறுப்பாளர் தாயகன், யுத்தத்தால் அழித்தொழிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதற்கு தமிழ்க் கல்வியாளர்கள் முன்வரவேண்டும் என அழைப்பு விடுத்தார்.

யுத்த அழிவுகளால் சிக்கித் தவிக்கும் தமிழ் பிரதேசங்களின் கல்வித்துறையைச் சீர்செய்வதற்கு அரசிலோ அல்லது அதன் கல்வி நிர்வாகக் கட்டமைப்பிலோ மட்டும் தங்கி நிற்பது பலன் தரப்போவதில்லை.

அதற்கப்பாலும் தமிழ்ப் பிரதேசங்களின் கல்வித் துறை குறித்து விசேடமாக கவனிக்கக் கூடிய தனிக் கல்விக் கட்டமைப்புத் தேவைப்படுகிறது.

விழ்ச்சியடைந்து வரும் தமிழ்ப் பிரதேச கல்வியை சீர்செய்வதற்கு வேண்டிய தனித்துவமான தேவைகளை அடையாளம் காணவும், ஓர் ஒழுங்கு முறையில் அமைந்த திட்டங்களைத் தயாரிக்கவும், அவற்றைச்செயற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், ஒழுங்குபடுத்தி வழிநடத்தவும் சுயாதீனமான கல்விக் கட்டமைப்பு அவசியமாகின்றது. அந்தத் தேவையை தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை நிறைவு செய்யமுடியும்; நிறைவு செய்யும் என்பது கல்வியாளர்களின் எதிர்பார்ப்பு.

எனவே, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி நிர்வாகக் கட்டமைப்புடன் இணைந்து கல்வி மேம்பாட்டுப பேரவை போன்ற அமைப்புகள் தயாரிக்கும் - தமிழீழ பிரதேச நலன் சார்ந்த - திட்டங்களை, முயற்சிகளை முன்னெடுப்பதன் மூலம் தற்போது விழ்ச்சியடைந்திருக்கும் தமிழர் பிரதேசக் கல்வி நிலையை மீண்டும் பழைய மட்டத்துக்கு - நல்ல நிலைக்கு - உயர்த்த முடியும்.

நமது அழியாச் சொத்து என்று நாம் கருதிவரும் கல்வியைத் தொடர்ந்தும் அழியாச் சொத்தாகப் பேணிப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கும் அந்தப பெருமையை, பெருமிதத்துடன் நாம் கையளிப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு இன்றைய தமிழ்க் கல்வியாளர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊதியிருக்கும் அபாயச் சங்கு, கல்வியாளர்களுக்கு எச்சரிக்கை ஒலியாக இருக்கட்டும்.

# தமிழ்ச் சமூகத்தைக் கட்டியெழுப்ப கல்வியாளர்கள் முன்வரவேண்டும்!

### மட்டு. - அம்பாறை தனியார் கல்வித்துறை பொறுப்பாளர் தாயகன் உரை

காரைதீவு,மே20

'யுத்தம் என்ற பெயரில் அழித்தொழிக்கப்பட்ட சமூகமாக தமிழ்ச் சமூகம் உள்ளது. அந்த தமிழ்ச் சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்ப தமிழ் கல்வியியலாளர்கள் முன்வரவேண்டும்.

- இவ்வாறு புலிகளின் மட்டு. - அம்பாறை பிராந்திய தனியார் கல்வித்துறைப் பொறுப்பாளர் தாயகன் காரைதீவில் நடைபெற்ற கல்வியியலாளர் மாநாட்டில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

புலிகளின் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் மகேந்திரவர்மன் தலைமையில் நடைபெற்ற கல்வியியலாளர் மாநாடு கடந்த வாரம் காரைதீவு சண்முக வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அங்கு தாயகன் மேலும் பேசுகையில்,

"கடந்தகால போரில் தமிழர்களது கலை, கலாசாரங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. கல்வி மறுக்கப்பட்டது. இவை மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டிய காலகட்டம் வந்துள்ளது. மாவீரர்களின் உன்னத தியாகத்தால் தோற்றுவிக்கப்பட்ட இன்றைய சமாதான சூழலை நாம் பயன்படுத்தவேண்டும்.

"நாட்டின் ஒரு சமூகம் முன்னேற வேண்டுமானால் கல்வியியல் ஸ்திரமாக இருக்க வேண்டும். தமிழ்ச் சமூகம் கல்வியில் கொடிகட்டிப் பறந்த சமூகம். அதைத் தொடர்ந்து நிலைநிறுத்தி எமது கல்விச் சமூகம் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

"நாம் யுத்தத்தில் வெற்றிகொண்டது போன்று அரசியல் போரிலும் வெற்றியடைவது நிச்சயம். கல்வியில் கூடிய அக்கறை செலுத்த வேண்டுமென்று எமது தலைவர் பிரபாகரன் பணிப்புரை விடுத்துள்ளார்.

"விடுதலைப் புலிகள், கல்விச் சமூகத்தை மதிப்புடன் வரவேற்கின்றனர். அவர்களின் அர்ப்பணச் சிந்தையின் பிரதிபலிப்பாக தமிழீழ மண் வளம்பெறும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. தமிழீழ மண்ணில் இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி விடுதலைப் புலிகள் அரசுடன் பேசச் சம்மதித்தனர்.

"இன்று அது நியாயமான காரணத்தினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட எமது மக்களின் நன்மைக்காக இதுவரை கணிசமான எந்த உதவி, திட்டம் முன்வைக்கப்படவில்லை.

"எமது மக்களின் தேவைக்குப் பயன்படாத நிதியைப்பெற டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்குபற்றுவர் என்று எதிர்பார்ப்பது தவறு.

"கல்விமான்களை நாம் நம்புகிறோம். நீங்கள் இறுக்கமாக அதிகாரத்துடன் கல்வி நிருவாகத்தைச் செயற்படுத்த வேண்டும்.

"நாம் எதற்கும் தடையாயிருக்க மாட்டோம். தமிழ்மக்கள் எதிர்காலத்திலாவது நிம்மதியாக வாழவேண்டும் என்பதுதான் எமது அடிப்படை எதிர்பார்ப்பு. அதற்கு கல்வியியலாளர்களின் பங்களிப்பு அவசியம் தேவை." என்று அவர் கூறினார்.

கூட்டத்தில் பிரதேச கல்விப் பணிப்பாளர்களான கே.செல்லத்துரை, கே.தயாசீலன் மற்றும் கல்விப் பணிப்பாளர் சரோஜினி உட்படப் பலரும் உரை நிகழ்த்தினர். (எ)

### யாழ்.செயலகம் முன்பாக இன்று

# மண் மீட்க நடக்கும் மறியலில் ஒன்றுதிரண்டு பங்குகொள்வீர்

## மாவை. சேனாதிராசா எம்.பி. அழைப்பு

யாழ்ப்பாணம்,மே20

வலி. வடக்கு மக்கள் இன்று யாழ். செயலகம் முன்பாக நடத்தும் மண் மீட்புப் போராட்டத்தில் குடாநாட்டு மக்கள் அனைவரும் கலந்துகொண்டு தமது ஆதரவினை வழங்க வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா.

தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி வலி.வடக்கு மக்கள் இன்று யாழ். செயலகத்தின் முன்பாக மாபெரும் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர். இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே மாவை. எம்.பி. இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"கடந்த 15 வருடங்களுக்கு மேலாகத் தமது வாழ்விடங்களில் இருந்து இராணுவத்தினரால் விரட்டப்பட்ட வலி.வடக்கு மக்கள் இன்றுவரை பல்வேறு வகையான இன்னல்களை அனுபவித்துள்ளனர்; அனுபவித்தும் வருகின்றனர்.

"வளம் நிறைந்த மண்ணில் இருந்து வெளியேறிய கவலை வலி.வடக்கு மக்களை உளரீதியாகவும் வெகுவாகப் பாதித்துள்ளது. வேளாண்மைக்குரிய பசும்பூமி, அந்நிய வருமானம் தரும் கடற்றொழில் அத்துடன் சிமெந்து ஆலை என்பன இவர்களின் மனங்களை இன்றும் கவலை என்னும் கடலில் மிதக்க வைத்துள்ளன.

"இவ்வாறு சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்ட இந்த மக்கள் அகதிமுகாம்களிலும் தெருவோரங்களிலும் தமது காலத்தைக் கழித்து வருகின்றனர்.

"இத்தகைய தாழ்நிலையில் இனவெறி கொண்ட சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் தொடர்ந்தும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை உள்ளடக்கி பாரிய முகாம்களை அமைக்கும் ஏற்பாடுகளில் முழு வீச்சுடன் செயற்பட்டு வருகின்றது.

"இத்தகைய நடவடிக்கைகள் சிறிதும் மனிதாபிமானமற்ற இலங்கை அரசினதும், பேரினவாத சக்திகளினதும் ஆக்கிரமிப்பு. அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராகவும் எமது தமிழ் மண்ணை மீட்கவும் மக்கள் போராட்டங்களை நடத்துவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.

"தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் கையெழுத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி பதினைந்து மாதங்கள் கடந்த பின்னரும் தமிழ்த் தேசத்தில் மக்களிடத்தில் இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை.

"பேரினவாத அரசியல் சக்திகளின் நெருக்குதல்களுக்குள்ளாகி வரும் அரசு, துணிவுடன் உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கிவிட்டு சொந்த மண்ணின் மக்களை மீளக் குடியமர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"சர்வதேச அரங்கு வரைக்கும் சென்றுவிட்ட தமிழ்த்தேச இனப்பிரச்சினையின் முக்கிய அம்சமாகிவிட்ட உயர் பாதுகாப்பு வலயமும் மக்கள் மீளக்குடியமர்வும் ஒரு தீர்வை நோக்கி முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகிவிட்டது.

"இவ்வேளை, நம் தமிழ்க் குடிமக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு அமைதியான முறையில் வலி.வடக்கு, உட்பட அனைத்து ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் தமிழ்மண்ணை மீட்டு மீளக்குடியமர்வதற்கு ஆதரவாக நடைபெறவுள்ள மறியற்போராட்டம் மற்றும் பேரணியில் பங்குகொள்ளுமாறு அழைக்கின்றேன்" - என்று அதில் உள்ளது.

(எ-ரி-86)

## கிழக்கில் கடல் கொந்தளிப்பு: மீனவர்களின் தொழில் பாதிப்பு

கல்முனை,மே20

கடந்த சில நாள்களாக கிழக்கு மாகாண கடற்பரப்பில் நிலவி வருகின்ற கடற்கொந்தளிப்பு மற்றும் காலநிலைச் சீர்கேடு போன்றவற்றினால் இப்பகுதி ஆழ்கடல் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த தாழமுக்கம் காரணமாக ஏற்பட்ட சூறாவளி அச்சத்தினால் கிழக்கு மாகாண ஆழ்கடல் மீனவர்கள் கடந்த ஒரு வாரகாலமாக காற்றினால் கடலுக்குச் செல்லாமல் வீடுகளிலேயே முடங்கி இருக்கின்றனர்.

இதனால் இப்பகுதி மீனவர் சமூகம் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

படகுத்துறைமுக வசதியொன்று கல்முனையில் இதுவரை ஏற்படுத்தப்படாதிருப்பதனாலேயே தாம் இவ்வாறான பாதிப்புக்களையும், வேறு பல பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருவதாக ஆழ்கடல் மீனவத் தொழிலாளர்கள் கவலையும், விசனமும் தெரிவிக்கின்றனர்.

இது விடயத்தில் அம்பாறை மாவட்ட எம்.பிக்கள் கரிசனை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதேவேளை தாழமுக்கம் - கடற்கொந்தளிப்பு - சூறாவளி போன்ற காரணிகளினால் அடிக்கடி ஏற்படுகின்ற பாதிப்புக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (எ)

### நாளை

வைகாசி 07
புதன்கிழமை
21.05.2003
திதி : ஷஷ்டி
முன்னிரவு: 11.37 வரை
நட்சத்திரம் : உத்தராடம்
முற்பகல் : 8.31 வரை
சுபநேரம் : 4.22 - 5.52
ராகுகாலம் : 11.52 - 1.22
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

சரியான பாதையாக இருந்தாலும் ஒரே இடத்தில் அமர்ந்துவிட்டால் நசுக்கப்பட்டு விடுவீர்கள்.

### உலக புகைப்பாவனை தடுப்பு தினத்தை முன்னிட்டு

## புகைத் தவிர்ப்பு வாரம் கல்வியமைச்சு பிரகடனம்

கொழும்பு,மே20

கல்வி அமைச்சு இம்முறை உலக புகையிலை பாவனை தவிர்ப்பு தினத்தை விரிவான முறையில் கொண்டாட இருக்கிறது.

உலக புகைப்பாவனை தவிர்ப்பு தினம் மே 31 ஆகும். உலகில் நாள் ஒன்றுக்கு 750 பேர் புகையிலைப் பாவனையால் மரணித்து வருகிறார்கள். புகைக்கும் ஆண் ஒருவர் வருடமொன்றுக்கு ஆயிரத்து 900 சிகரெட்டுகள் புகைக்கிறார். 5 லட்சம் பெண்கள் புகைப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர்.

புகைத் தவிர்ப்பு தினத்தையொட்டி பாடசாலைகள் கல்வி அமைச்சு விசேட உபகுழுவொன்றை நியமித்துள்ளது. பாடசாலை மட்டத்தில் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துதல், காலைக் கூட்டத்தில் புகைத்தல் எதிர்ப்பு பிரசாரம் செய்தல், பதாகைகளைத் தொங்கவிடுதல், தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட சுவரொட்டிகளை பார்வைக்கு விடல் போன்ற பல நிகழ்ச்சித் திட்டங்களை மேற்படி உபகுழு செயற்படுத்தும்.

ஜூன் 23 முதல் 26 வரை போதைப் பொருள் தடுப்பு தினங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர் 5 தலைப்புகளில் கட்டுரை எழுத போட்டி வைக்கப்படும்.

மாணவர் மத்தியில் நாடகம், விவாதம், சுவரொட்டிப் போட்டிகளும் அந்த வாரத்தில் நடத்தப்படவுள்ளன. (எ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
17 - 01 - 1995



உதிர்வு
20 - 04 - 2003

# செல்வி புஸ்பராசா சபீனா (சபிக்குட்டி)

(யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, தரம் 4'C' மாணவி)

**திதி: சதுர்த்தி**

*அன்பே உருவான சபீக்குட்டியே! உனது*
*இனிய பேச்சும் மலர்ந்த முகமும் சிரித்த உதடும்*
*எப்போதும் எம் நெஞ்சை நெருடுகின்றதே!*
*அன்பு முகங் காட்டி ஆதரவு மொழி பேசி – நல்ல*
*இன்ப வாழ்வு வாழ நினைத்திருந்தோம் ! நீயோ*
*எம் நினைவுகளில் நெருப்பைக் கொட்டி விட்டாயே!*

*ஏன் அம்மா எங்களை விட்டுச் சென்றாய்?*
*தைப்பூச நன்னாளிலே தாய் மடியில் தவழ்ந்தாயே!*
*கைப் பூவாய் மலர்ந்து மணம் வீசக் காத்திருந்தோம்!*
*காலன் விரித்த வலையில் அகப்பட்டு விட்டாயோ?*
*ஞாலம் நடுங்க வந்து இன்னுயிர் கவர்ந்திட்டானே*
*இரக்கமற்ற அரக்க குணம் அவனுக்குக் கைவந்த கலையே!*

*தமிழ்த்தினப் போட்டிதனில் தத்ரூபமாய் ஒளிர்ந்து – நீ*
*அமிழ்தினும் இனிய ஆனந்தத்தை அளித்தாயே! – உன்*
*இறுதி மூச்சு அடங்கும்வரை அறிவோடு திகழ்ந்தாயே!*
*உறுதியான நெஞ்சுடனே மகிழ்விப்பாய் என்றிருந்தோம் – எமைத்*
*தவிக்க விட்டு நீ தரணி விட்டுப் போனாயோ? தாயவள்*
*பெற்றெடுத்த பேதைமனம் அலறித் துடிக்குதையோ!*

*கண்ணீரில் நனைந்து நாம் கலங்கித் தவிக்கின்றோம் – நல்ல*
*காவியமாய் மிளிர்ந்து எம் கருத்தோடு கலந்து உயிர்*
*ஓவியமாய் மாறிவிட்ட உன்னை மறக்க முடியுமா?*

*கல்வியிற் சிறந்து காசினியிற் திகழ்ந்து நின்ற*
*சபீக்குட்டியே! இனிக் காண்பதெப்போது? வருவாயா?*
*நெஞ்சு வலிக்கிறதே! நிலைகெட்டுத் துடிக்கிறதே!*

*நீ இல்லாத இல்லம் வெறிச்சோடிக் கிடக்கிறதே – நாம்*
*வைத்தியம் செய்கிறோம் செய்கிறோம் என்று சொல்லி எம்மைப்*
*பைத்தியமாக்கி விட்டார்கள் பாழ் நரகுக்கே செல்வார்கள்*
*உன் செல்லத்தம்பி "குட்டி அக்கா" என அழைப்பது உன் காதுகளுக்குக்*
*கேட்கவில்லையா? பாவிகள் நாம் இன்னும் உயிரோடு இருக்கிறோமே!*
*சபீக்குட்டியே! ஒருமுறை எங்கள் முன்னால் ஓடி வரமாட்டாயா?*

*கடவுளைக் கைதொழுதே தினமும் கல்வி கற்கச் செல்வாயே*
*இடர் வந்த போதும் இனிய முகம் மாறாதே! உன்*
*உடன்பிறந்த உள்ளங்கள் உறவுக்காய்த் தவிக்கையிலே*
*படங்காட்டிப் போனாயோ பாவிகள் நாம் என்செய்வோம்?*
*நடமாடும் தில்லை நடராசப் பெருமானின் திருவடியை*
*திடமாகப் பிடித்தே நீ வானுலகை அடைந்தாயோ?*

*கலகலப்பான பேச்செங்கே? கருணை வழியும் முகமெங்கே?*
*வெலவெலத்துப் போனோமே நாம்; வெந்து மனம் வாடியதோ?*
*எமக்காக நீ ஒருக்கால் எம்முன்னே எழுந்தோடி வாராயோ?*
*உனக்காக ஏங்கித் தவிக்கும் உள்ளங்களைப் பாராயோ?*
*முப்பத்தொரு நாளாச்சோ முழுநிலவு மறைந்து போய்*
*எப்படி நாம் உனை மறப்போம் எம்முள்ளத்தில் நீ இருக்க!*

**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

எமது அன்புச் செல்வத்தின் மறைவு கேட்டு எமது இல்லம் நாடி ஓடோடி வந்து எமது துயரில் பங்கேற்ற அன்புள்ளங்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் செய்த அனைவருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

குடும்பத்தினர்:
அப்பா - **நா.புஸ்பராசா,** அம்மா - **பு.அன்னராணி,**
அண்ணா - **பு.சஞ்சயன்,**
அக்காமார் - **பு.சயனியா, பு.சகானா,** தம்பி - **கஜமுகன்.**

(18141)

புகழ் ஸ்ரோஸ் - சுன்னாகம்

# எங்கள் அனுபவங்களின் வாயிலாக நீங்கள் கற்க வேண்டியது அதிகம் உண்டு!

## பலஸ்தீனப் பிரதமருக்கு ஒரு பகிரங்கக் கடிதம்

பலஸ்தீனப் புதிய பிரதமர் அப்பாஸ அறிவது!

எனக்கு இன்றைக்கும் ஞாபகம் இருக்கின்றது. ஆரம்ப காலத்தில் தமிழ் ஈழத்தில் வீரமரணமடைந்த போராளிகளின் அஞ்சலி சுவரொட்டிகளில் அவர்களின் பெயர்களுக்குப் பக்கத்தில் பி.எல்.ஓ. பயிற்சி என்று போட்டிருப்பார்கள். அதாவது பாலஸ்தீன விடுதலை அமைப்பில் அவர்கள் பயிற்சி பெற்றவர்கள் என்பது கருத்து.

ஆரம்ப காலத்தில் தமிழ்ப் போராளிகள் உங்கள் நாட்டின் பலஸ்தீன விடுதலை அமைப்பில் பயிற்சி பெற்றதும், உங்கள் போராட்டக் களங்களில சில இடங்களில் அவர்கள் காட்டிய வீரம் இஸ்ரேலியருக்குப் பயத்தைக் கொடுத்ததும், அதனால் இஸ்ரேலியர்கள் இலங்கைக்கு உதவியதும், இலங்கை அரசை - யுத்தத்தை தீவிரப்படுத்த ஆலோசனை வழங்கி அந்தப் போராளிகளை விரைவில் நாடு திரும்பச் செய்ததையும் ஏற்கனவே இஸ்ரேலிய முன்னாள் மொசாட் அதிகாரி ஒருவரின் சுயசரிதைப் புத்தகத்தில் நாம் படித்திருக்கிறோம். அது இருக்க...

பலஸ்தீன விடுதலைப் பாடலான 'ஓ மரணித்த வீரனே உன் சீருடைகளை எனக்குத் தா' என்ற பாடல் தமிழ் மொழியில் மட்டுமல்ல - உலகெங்கும் - எங்கெங்கு விடுதலை உணர்வு பிரவாகிக்கின்றதோ அங்கெலலாம் மொழி பெயர்க்கப்பட்டது. உலகின் பல விடுதலை போராட்ட சக்திகளுக்கு உந்து சக்தியாக விளங்கியது உங்கள் நாட்டுப் போராட்டம்தான் என்றால் அது மிகையாகாது.

உலக விடுதலை அமைப்புக்கள தங்கள் மக்களின் சுதந்திரத்திற்காகவும், விடுதலைக்காகவும் உங்களிடம் தமது போராளிகளை அனுப்பி பயிற்சி பெற்ற காலம் போய் - இன்று நீங்களும் அரபாத்தும் உங்கள் பாதுகாப்பு, சுதந்திரம் என்பவற்றை இஸ்ரேல் படைகளிடம் ஒப்படைத்துவிட்டு வீட்டுக்காவலில் இருப்பதுபோல் இருக்கின்றீர்கள்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா காலத்தில் நடத்தப்பட்ட அணிசேரா நாடுகளின் மாநாட்டுக்கு யசீர் அரபாத் இலங்கைக்கு வந்ததும், அவரின் கம்பீரமான நடையை நாம் பார்த்து பிரமித்ததும், அங்கு அவர் எங்கள் தமிழ மக்களுக்காகக் குரல் கொடுத்ததும் நாம் மறக்கவில்லை. எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கின்றது உங்கள் நாட்டு போராட்டத்திற்காக - எங்கள் போராளிகளால் தமிழீழத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் - எனது சிறிய வயதில சுலோகத்தை ஏந்தி நான் பங்கேற்றிருக்கின்றேன்.

இரு தசாப்தங்களுக்கு முன்பே அமெரிக்கா உங்களை எதிர்த்தபோதும், ரஷ்யா, இந்தியா, இலங்கை உட்பட பல நாடுகள் உங்களையும் உங்கள் அமைப்பையும் அங்கீகரித்திருந்தன. அத்தோடு, நேரடியாக நிதியுதவி மற்றும் ஆயுத உதவிகளையும் செய்தன. ஆனால், விடுதலைப் புலிகளை இன்னும் தடைசெய்த நாடுகள் இருக்கின்றனவே தவிர அவர்களுக்கு நேரடியாக உதவும் நாடுகள் என்று எதுவும் இல்லை. உலகில் எந்தவொரு நாட்டின் உதவியும் இல்லாமல் முன்னிலைக்கு வந்த ஒரே ஒரு விடுதலை அமைப்பு புலிகள்தான் என்றால் அது மிகையாகாது. நான் நினைக்கிறேன். அப்படி பல நாடுகளும் எதிர்த்ததால்தான் அவர்கள் இவ்வளவு தூரம் முன்னேற முடிந்ததோ என்று. ஏனென்றால் அடிக்கின்ற காற்றை எதிர்த்துத்தான் அதிகம் உயரும் பட்டம்.

உங்கள் விடுதலைப் போராட்ட அனுபவத்தின் வாயிலாக நாம் நிறையவே பாடங்களைப் படித்துக் கொண்டோம். ஆனால், இப்போது நீங்கள் எங்கள் அனுபவத்தின் வாயிலாக நிறையப் படிக்க வேண்டியுள்ளது.

நீங்கள் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கைக்கும் காரணம் நோர்வேதான். அந்த உடன்படிக்கை தோல்வியில் முடிந்ததும் நோர்வேயையும் அமெரிக்காவையும் நம்பி நான் மோசம் போனேனே என்று அரபாத் அழுது புலம்பியதும் நாம் அறிவோம்.

உங்கள் அந்த அனுபவத்தின் வாயிலாக நாம் நிறையவே பாடங்களைப் படித்துக்கொண்டோம்.

உலக நாடுகள் அரசியல் ரீதியில் உங்களை அங்கீகரித்தபோதும் இராணுவ ரீதியில் உங்களை நீங்கள் பலப்படுத்தவில்லை. ஆனால்., விடுதலைப் புலிகள் உலக நாடுகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது தம்மை இராணுவ ரீதியில் பலப்படுத்திக்கொண்டனர். இப்போது அந்தப் பலத்திற்காக அவர்களை அரசியல் ரீதியில் அங்கீகரிக்க முன்வருகின்றனர். அங்கையும் சிக்கல்தான்...

இப்போது அவர்களை அரசியல் ரீதியில் தனிமைப்படுத்த முயற்சிகள் நடக்கின்றது. வாஷிங்ரன் மாநாடு முதல் முயற்சி. அதுவே இறுதி முயற்சியாக - அதனை புலிகள் முளையிலேயே கிள்ளிவிட்டனர்.

ஆனால், அரபாத்தை தனிமைப்



படுத்துவது மட்டுமல்ல, ஓரங் கட்டவும், தூக்கியெறியவும் முனைந்ததன் விளைவுதான் அப்பாஸ் என்கிற உங்கள் பிரதமர் நியமனமும், உங்களுக்கு வெள்ளை மாளிகை அழைப்பும், அத்துடன் - ஒரு சமாதானப் பாதை என்ற தீர்வுப்பொதியும் இது சமாதானத்திற்கான பாதையோ அல்லது உங்கள் மக்களின் சமாதி மேட்டுக்கான பாதையோ என்பது போகப்போகத்தான் தெரியும். அது உங்கள் 'கெட்டித்தனத்தில்தான் உள்ளது.

ஆரம்பத்திலேயே உங்களுக்குச் சிக்கல். உங்கள் நாட்டில் உள்ள மற்றைய குழுக்கள் வன்முறைகளை கைவிட்டாலே ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவேன் என்கிறது இஸ்ரேல். இனி இதை அமெரிக்காவும் வழிமொழியும்.

நாங்களும் உங்களை மாதிரித்தான் இன்னொருவரால் ஆக்கிரமிக்கப்பட்டோம். அதுவும் இஸ்ரேல் முன்னாள் அதிபரின் - ஆயிரம் படையினரை, ஓர் இடத்தில் நிறுத்தி வைப்பதைவிட பத்துக் குடும்பங்களை அந்த இடத்தில் குடியேற்றுவது பலமானது - என்ற கூற்றுப்படித்தான் இலங்கை அரசுகளும் செயற்பட்டு வந்தன. எங்கள் வீட்டுக்குள் வந்திருந்தவர்களை நாங்கள் விரட்ட வெளிக்கிட - எங்களை வன்முறையாளர்கள், பயங்கரவாதிகள் என்றனர். பின்னர் வன்முறையை கைவிடுங்கள் அங்கீகரிக்கிறோம் என்றனர். அதனை கைவிட்டாலும் அவர்களின் தொந்தரவுகள் வேறு வடிவில் வருகின்றன.

நல்லவேளை, இங்கு உங்கள் நாட்டைப் போல் வேறு குழுக்களின் வன்முறைகள் இல்லை. இதற்குத்தான் எங்கள் நாட்டில் வேறு பல அமைப்புகளை இல்லாமல் செய்தார்கள் புலிகள்.

இருந்தபோதும் அமெரிக்கா அரபாத்தை ஓரங்கட்டிவிட்டு உங்களைத் தெரிவுசெய்தது போல் இலங்கையில் ஆனந்தசங்கரியையும் இன்னும் சிலரையும் சில நாடுகள் இங்கு தெரிவு செய்யத்தான் செய்கின்றன.

நீங்களும் அரபாத்தும் இணைந்து மற்றைய குழுக்களை கட்டுப்படுத்தினாலும் பிரச்சினைகள் வேறு வடிவில் தோற்றுவிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். இலங்கையில் போர்நிறுத்தத்தை குழப்ப மூன்றாம் தரப்புக் குழு ஒன்று இயங்குகின்றது என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவே சொல்லியிருக்கிறது. நீங்களும் இந்த விடயத்தில் சற்றுக் கவனமாக இருப்பது நல்லது. ஏனென்றால் உங்கள் பிரச்சினை, எங்கள் பிரச்சினைகள் சர்வதேச மயப்படுத்தப்பட்டபின் என்னவேண்டுமானாலும் நடக்கலாம்.

சரி. அப்படியும் நீங்கள் உங்கள் மற்ற அமைப்புக்களைக் கட்டுப்படுத்தியோ, அல்லது அவர்களை கொஞ்சக் காலத்திற்கு அடக்கி வாசிக்குமாறோ கட்டுப்படுத்தலாம். அதோடு பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நினைக்காதீர்கள்.

இப்பொழுது, விடுதலைப் புலிகள் வன்முறையை கைவிட்டதும் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? 'ஐயோ! தமிழ்ச் சிறார்களை பிடித்துக் கொண்டு போகின்றார்கள், தமிழ் மக்களிடம் வரி வசூலிக்கின்றார்கள்' என்று எங்களுக்காக அனுதாபப்படுகின்றனர்.

உங்கள் பகுதி சிறார்கள் கொல்லப்பட்டபோதும், அவர்கள் தங்கள் பாடசாலைகளில் படிக்க முடியாத படி அகதி முகாம்களில் உள்ளபோதும் அதனையிட்டு கவலைப்படாதவர்கள். ஏன் கடந்த வாரம் மனித உரிமை அமைப்புக்கூட இஸ்ரேல் சிறைகளில் 300இற்கும் மேற்பட்ட சிறார்கள் உள்ளனர் என்று தெரிவித்துள்ள நிலையில், அதனையிட்டுக் கவலைப்படாதவர்கள் எல்லாம் இனிமேல் கவலைப்படுவார்கள்.

இதேபோல் உங்களுக்கும் நடக்கும். 'ஐயோ! பலஸ்தீனச் சிறார்களை பிடிக்கின்றார்கள், அவர்களை படையில் சேர்க்கின்றார்கள், பலஸ்தீன மக்களிடம் வரி வசூலிக்கின்றார்கள்' என்று பலஸ்தீனியர்களின் மீது இஸ்ரேலியர்களும் அமெரிக்கர்களும் அனுதாபம் செலுத்துவார்கள். 'பிபிசி' கூட அதற்கு சான்றாக பல பேட்டிக நிகழ்ச்சிகளைச் செய்யும். பலஸ்தீனியர்கள் தவிர மற்றெல்லோரிடமும் பேட்டி காணும்.

வரி வசூலிப்பதையும், சிறார்களை படையில் சேர்ப்பதையும் நீங்கள் கைவிட்டதன் பின்னரே உங்களை அங்கீகரிப்பதென்றும், யூத படைகள் அமைத்துள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை விட்டு விலகுவார்கள் என்றும் அமெரிக்காவும் இஸ்ரேலும் நிபந்தனை விதிப்பார்கள். ஆட்டுக்குட்டிகளின் மீது ஓநாய்கள் அக்கறை கொள்ளும். நீங்களே பின்னர் அமெரிக்காவின் கண்ணுக்கு பயங்கரவாதியாகபபடுவீர்கள். இப்போது உங்களை வெள்ளைமாளிகைக்கு அழைத்துள்ளனர்.

ஒரு விடயத்தை மறந்துவிடாதீர்கள். நெல்சன் மண்டேலாவையும் அரபாத்தையும் பயங்கரவாதிகள் என்று கூறி வெள்ளைமாளிகையில் உட்புக விடவில்லை. பின்னர் வரவேற்றனர். ஆனால், உங்களை எடுத்த எடுப்பிலேயே நல்ல மனிதர் என்று கூறி - பின்லேடனை, வரவேற்றது போல் வெள்ளைமாளிகைக்கு வரவேற்கின்றனர். பின்னாளின் பின்லேடனின் நிலை உங்களுக்கு வாராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

முன்னர் உங்கள் அனுபவத்தின் வாயிலாக நாம் நிறையவே பாடங்களைப் படித்துக்கொண்டோம். ஆனால், இப்போது நீங்கள் எங்கள் அனுபவத்தின் வாயிலாக நிறையப் படிக்க வேண்டியுள்ளது. நாங்கள் முன்னர் எங்களில் பலரை உங்களிடம் பயிற்சிக்கு அனுப்பியதுபோல் நீங்கள் இப்போது....

வேண்டாம்... இதெல்லாம் வெளிப்படையாய் சொல்லமுடியாது... உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்.

புரிந்தால் சரி...
இப்படிக்கு,
வாசகன் **ரட்ணதுரை**
(கனடா) நன்றி:ஈழமுரசு

---

**மகளிர் குழுவின் ஆண்டுவிழாவில் உரை**

# அழுத்தங்கள் அதிகரிக்கும்போது திறமைகளை வெளிப்படுத்துங்கள்

## எழுத்தாளர் கோகிலா மகேந்திரராசா அழைப்பு

வலிகாமம்தெற்கு,மே20

பெண்கள் தம் மீது சுமத்தப்படும் பல்வேறு அழுத்தங்களின் போதெல்லாம் தமது திறமைகளையும் ஆளுமைகளையும் வெளிப்படுத்தி உரிமைகளை நிலைநாட்ட வேண்டும்.

தெல்லிப்பழையில் நடைபெற்ற மகளிர் தினவிழாவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் எழுத்தாளருமான திருமதி கோகிலா மகேந்திரராசா மேற்கண்டவாறு கூறினார்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் குழுவின் ஆண்டு விழா அண்மையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. மகளிர் குழுத் தலைவி திருமதி மா.பாலகணேசன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் மேலும் கூறியதாவது:-

"உலகளாவிய ரீதியில் பெண்கள் இன்றும் பல்வேறு அழுத்தங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். தமது உரிமைகளுக்காக பெண்கள் இன்னமும் பல போராட்டங்களை நடத்தவேண்டியுள்ளது.

"தமது ஆளுமைத்தன்மை, திறமைகளை வெளிப்படுத்தக்கூடிய முறையில் செயற்பட்டு தம்மீது சுமத்தப்படும் அழுத்தங்களுக்கெல்லாம் பதிலடி கொடுக்க வேண்டும்.

"மகளிர் அமைப்புக்கள் ஊடாக ஒன்றுபட்டு உழைக்க பெண்கள் முன்வர வேண்டும்" என்றார்.

தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளரான புஸ்பன் உரையாற்றுகையில், "கூட்டுறவுத் துறையில் பெண்களின் பங்களிப்பும், மக்களின் பங்களிப்பும் அதிகரிக்கப்பட வேண்டும். அண்மைக் காலங்களில் கூட்டுறவுத்துறை பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கி உள்ளது.

"யுத்த நிலை மாறியதனால் கூட்டுறவுத் துறையில் பொருள்களைப் பெறும் முறை மாறி சகல பொருள்களும் வீட்டு வாசலிலேயே இலகுவில் பெறக்கூடிய நிலை காணப்படுகின்றது.

"கூட்டுறவுத் துறையினை வளர்க்கவும், பாதுகாக்கவும் மக்கள் அதிக பங்களிப்புச் செய்து பலதுறைகளில் கூட்டுறவுச் செயற்பாட்டை அதிகரிக்க வேண்டும்" என்றார். (எ-152)

---

# நெடுங்குளம் பகுதியில் சகாய விலையில் காணிகள்

## 47 குடும்பங்கள் பயன்பெறும்

கொழும்புத்துறை,மே20

கொழும்புத்துறை நெடுங்குளம் பகுதியில் வசிக்கும் எஸ்.மரியதாஸ் என்பவருக்குச் சொந்தமான சுமார் 60 பரப்புக்காணி அப்பகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் சொந்தக் காணி அற்ற குடும்பங்களுக்கு சகாய விலையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

60 பரப்புக்கும் அதிகமான காணியே 47 பயனாளிகளுக்கு பரப்பு ரூபா 50 ஆயிரம் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

காணிச் சொந்தக்காரருடன் கொழும்புத்துறை கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து பேசியதையடுத்து மேற்படி காணியை சலுகை விலையில்பெற்று மக்களுக்கு வழங்க முடிந்தது என மீனவர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி காணிப்பகுதியை ஒரு வீடமைப்புத் திட்டமாக செயற்படுத்தி வீடற்ற மக்களுக்கு வீடுகளை அமைத்து உதவுமாறு யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-30)

---

# இளைஞர் சேவைகள் மன்ற பணிகள் பாதிப்புறும்நிலை

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் நால்வர் விரைவில் சுயவிருப்பத்தின் பெயரில் ஓய்வுபெறப்போவதாக கூறி, அதற்கான படிவங்களை தலைமையகத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

தேசிய இளைஞர் சேவைகள் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெறுவது சம்பந்தமான சுற்றறிக்கைக்கு அமைவாகவே தாம் இந்த ஓய்வு விண்ணப்பத்தை சமர்ப்பித்ததாக அந்த அதிகாரிகளில் ஒருவர் தெரிவித்ததாக கூறப்பட்டது.

இதற்கிடையில் ஏற்கனவே ஆளணி பற்றாக்குறையுடன் இயங்கி வரும் மேற்படி யாழ்.பிராந்திய அலுவலகத்தின் பணிகள் இதனால் மேலும் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்படலாம் என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்பிராந்திய அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-4-86)

# 31ஆம் நாள் நினைவுகள்



அமரர்

## கதிரவேலு பொன்னையா

கடந்த 19.04.2003 சனிக்கிழமை காலமான எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.05.2003) செவ்வாய்க்கிழமை கீரிமலைத் தீர்த்தக் கரையில் நடைபெறும். நாளை (21.05.2003) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நாமகள் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(18110)

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், மைத்துனர்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

*அன்னையின் மடியில்* 07 - 02 - 1917



*இறைவன் அடியில்* 22 - 04 - 2003

அமரர்

## அருணாசலம் இரத்தினசபாபதி

*(கார்காரச் சபா)*

திதி: 22.05.2003

22.04.2003 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையார் அமரர் அருணாசலம் இரத்தினசபாபதி அவர்களின் இறைபதப்பேறு குறித்து 22.05.2003 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

22.04.2003 அன்று அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் வெளிநாடுகளிலும் உள்ளூரில் இருந்தும் தொலைபேசி, தந்தி, தபால்மூலம் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எமக்குப் பல வழிகளிலும் உதவிகளை நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*காந்தி வீதி,*
*வல்வெட்டித்துறை.*

(18052)

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## மிதிவெடிகளால் மின்விநியோக பணிகள் தடை

சாவகச்சேரி,மே20

நாவற்குழி பாலத்தில் இருந்து யாழ்.வீதிப் பக்கமாக வீதியின் ஓரத்தில் பற்றைகள் அடர்த்தியாக வளர்ந்துள்ளன. இந்தப் பற்றைகளில் கடந்த ஒரு வாரமாக மிதிவெடி அபாய அறிவிப்புப் பலகைகள் தொங்க விடப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மிதிவெடி அபாய அறிவிப்பைத் தொடர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்துக்கான உயர் அழுத்த மின் மார்க்க வேலைகள் இப்பகுதியில் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-31)

## கடும்புயலால் சனசமூக நிலையம் பலத்த சேதம்!

கொழும்புத்துறை,மே20

அண்மையில் வீசிய கடுங்காற்றினால் அரியாலை சனசமூக நிலையத்தின் கூரை ஓடுகள், மரங்கள் என்பன தூக்கி வீசப்பட்டு பலத்த சேதமடைந்துள்ளன.

யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்திருந்த மேற்படி சனசமூக நிலையக் கட்டடம் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டு இருந்தது. இந்தக் கட்டடத்தின் கூரையே மீண்டும் தற்போது சேதமடைந்துள்ளது.(எ-30)

## விக்கிரகம் திருட்டு!

யாழ்ப்பாணம்,மே20

கோவிலாக்கண்டி கோவிந்தசாமி ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை ஐம்பொன் விக்கிரகம் திருடப்பட்டதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் உருவாக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட இந்த எழுந்தருளி விக்கிரகம் களவாடப்பட்டதால் புனரமைக்கப் பட்டு வரும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகத்தை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகம் மேலும் கூறியுள்ளது.


### பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய அல்லது நாளாந்தம் வந்துபோகக் கூடிய பணிப் பெண் தேவை.

தொடர்பு:
டெலிபோன் - 071 347564
(18153)



### C.C.A.

K.K.S. வீதி, சுன்னாகம்.

**Spoken English**
With
**Grammar**
*By*: Nishanthan
*(Dip.in English)*
**புதிய பிரிவு**
ஆரம்பம்: 20.05.2003
செவ்வாய் (இன்று)
(18160) 4.00 p.m.


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 03 - 06 - 1927



மறைவு 20 - 04 - 2003

திருமதி

## கார்த்திகேசு செல்லம்மா

அன்பாக பண்பாக காத்து வளர்த்த
எமது தெய்வமே!
நீண்ட வெகு தூரம் அம்மா
நீர் சென்று விட்டாலும் - என்றும்
உங்கள் நினைவுடன்!

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

*தட்டாங்குள வீதி,*
*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*

(18099)

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# 3ஆம் ஆண்டு நினைவு நாள்



அமரர்

## முத்து இராசரத்தினம் (முத்தையா)

*(ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்)*

தோற்றம் 29.04.1934

மறைவு 23.05.2000

திதி: 20.05.2003

*ஆண்டுகள் மூன்றாகி விட்டும்*
*ஆறவில்லை எம்துயரம்.*

என்றும் உங்கள் நினைவுடன்:

*'முருகன் இல்லம்',*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*

(18031)

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்.**


# புரோட்டினெக்ஸ்

நாள்தோறும் இழக்கும்
சக்தியை மீட்டுத்தருகிறது

**100% தாவரப் புரதம்**

விட்டமின்களும் கனியுப்புக்களும் அடங்கியது
கொலஸ்ரோல் அற்றது



# நீங்காத நினைவில் 3ஆம் ஆண்டு



## மேஜர்
## மித்திரன்/கண்ணன்

(புவனேந்திரன் - சதீஸ்பாபு)

(பழைய மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி)

தாயின் மடியில்
03-12-1973


தமிழன்னை மடியில்
20-05-2000

தமிழ் மக்கள் சுதந்திர வாழ்வுக்குப்
போராட, தலைவனோடு இணைந்த தீரனே!
மித்திரா எங்கள் அன்பு மகனே!
எங்கள் நெஞ்சிருக்கும் வரை
உந்தன் பசுமை முகம் எங்கள்
மனதில் நினைவிருக்கும்.

அப்பா, அம்மா, தம்பி,
அப்பம்மா, நண்பர்கள்

மித்திரனோடு வீரச்சாவடைந்த கப்டன் சுடர்மதி/சந்திரன் அவர்களையும் இதுவரை வீரச்சாவடைந்த மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

கொக்குவில். (18085)

**இமாமி பவுடர்கள்** நாள் முழுவதும் உங்களுக்குப் புத்துணர்ச்சியைூட்டி நறுமணத்துடன் திகழ வைக்கிறது.

**அம்லா ஹெயர் ஒயிலில்** அம்லாவும் விற்றமின் Cயும் அடங்கியுள்ளதால் இது தலைமயிரை அடர்த்தியாக வளரச் செய்வதுடன் போஷாக்கும் அளிக்கிறது.

**நவரத்ன ஒயில்** நாள்முழுவதும் தலையைக் குளிர்மையாக வைத்திருக்க உதவுகிறது. இது தலைவலி, தலைப்பாரம், தூக்கமின்மை, அலுப்பு போன்றவற்றை நீக்க உதவுவதோடு தலை முடியையும் நன்கு வளரச் செய்கிறது.

**இமாமி போரோபிளஸ் அன்ரிசெப்ரிக் கிறீம்**
இது சருமத்தில் ஏற்படுகின்ற வெடிப்புக்கள், வரண்ட உலர்ந்த சருமம், கால் வெடிப்புக்கள் போன்றவற்றுக்கு உடனடி நிவாரணத்தைத் தருகிறது.
ஒரு நாளில் இரண்டு முறை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உபயோகிக்கவும். இது நறுமணமூட்டப்பட்ட கிறீம். ஆதலால் உடம்பின் எந்தப் பகுதிக்கும் ஏற்றது.

(சி-27061)

சந்தைப்படுத்துவோர்:
***HARCOURTS(PRIVATE)LTD.***
No:14, Station Road, Dehiwala.

யாழ்.முகவர்:
**JEGHAN PHARMACY**
**ஜெகன் பார்மஸி**
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021- 2222194



# 25.05.2003 இதழில்

விலை 16 /=

# சுடர் ஒளி

- அதிகாரமுள்ள கட்டமைப்புக்கு அரசு உத்தரவாதம் அளிக்குமா?
  - அபிவிருத்தி லொத்தர் சபை ஏற்படுத்தி வரும் நெருக்கடி
- குடாநாட்டை கலக்கும் சார்ஸ் பீதி!
  - கட்சித் தாவல்களுக்குக் கடிவாளம் ஜம்போ 'சைஸ்' மந்திரிசபை குறைப்பு ஆளும் பி.ஜே.பி. அரசின் அசகாய நடவடிக்கை.
- அமெரிக்கா அறியாததுமல்ல புலிகளுக்கு புரியாததுமல்ல
  - கொள்ளைக்காக கொலைகள் இச்சை தீர்க்க இழிசெயல்கள்

மதன் தொடர், பெண், அலைகளின் காவியம், திருக்கோணேஸ்வர திருத்தல யாத்திரை, பித்தன் பதில், இளஞ்சுடர், கலையமுதம், அதிசயம் ஆனால் உண்மை, மசாலா மிக்ஸ், ஆந்தையாரின் க்ரைம் டயறி, இணையத் தளத்திலிருந்து....., சொற்சிலம்பம், கவிதைப் புனல், மலையகம் இன்னும் பல அம்சங்களுடன்....




(சி-27982)

## வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்
## பொருள்கள், சேவைகள் வழங்குநர்களை பதிவுசெய்தல் - 2003

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தின் கீழுள்ள பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் பின்வரும் பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்காகப் பதிவுசெய்வதற்கு வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. எழுது உதவும் சாதனங்கள்.
02. நூலகப்புத்தகங்கள்.
03. விஞ்ஞான, கணித, விவசாய, விளையாட்டு, தொழில்நுட்ப, அரசியல் பொருள்கள், உபகரணங்கள் கருவிகள்.
04. கணனிமுறைகள் மற்றும் கணனிகளின் திருத்தமும் பராமரிப்பும்.
05. போட்டோ பிரதி இயந்திரம், பிரதியெடுக்கும் இயந்திரம், தட்டச்சு இயந்திரம் ஆகியவற்றின் திருத்தமும் பராமரிப்பும்.
06. ஏனைய பண்புசார் உள்ளீடுகள் உபகரணங்கள்.

விண்ணப்பப்படிவங்களை வலிகாமம் வலயக்கல்வி அலுவலக கணக்காளரிடம் இருந்து ரூபா 100 மீளச்செலுத்தப்பெறாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 02.06.2003ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக *வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், மருதனார்மடம், சுன்னாகம்* எனும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 02.06.2003ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு முன்னர் இடுதல் வேண்டும். அதேநாளில் பி.ப. 3.00 மணிக்கு விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் வலயக்கல்விச் சபையின் பரிசீலனையின் பின்னர் தகைமைபெறுகின்ற விண்ணப்பதாரிகள் பதிவு செய்துகொள்ளப்படுவர்.

விண்ணப்பங்களை அனுப்பும்போது காகித உறையில் இடதுபக்க மேல்மூலையில் *"வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2003"* எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விநியோகிக்கவேண்டிய பொருள்கள் சேவைகள் பற்றிய விவரங்களை அறிய விரும்பின் இக்காரியாலய கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தெ.இருதயநாதன்
கேள்விச் சபைத் தலைவர்,
வலயக்கல்வி அலுவலகம்,
வலிகாமம்.

(c/27993)



## THE REFUGEES REHABILITATION ORGANISATION
TRRO
## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106, 4th Cross Street, Jaffna,
Sri Lanka

## VACANCIES

**Team Co - Ordinator (1)**
- Degree Holder (Preferably Management)
- Five years experience in social work
- Communication skill and experience in communication
- Proficient in English (Speaking and Writing)
- Efficient in preparing project proposals and submitting reports
- A good knowledge in human relationship and social mobilization programmes
- Administrative talents and works regarding administration
- Knowledge in Computer
- Age limit 25-40

**Project Manager - (1)**
- Degree Holder (in Science and Management)
- 3 Years Experience in Social Activities
- Talents in Communication with the public
- Proficient in English (Speaking and Writing)
- Experience in preparing project proposals
- knowledge in Computer
- Age limit 25-40

**களநிலை உத்தியோகத்தர் - 4 (இருபாலாரும்)**
G.C.E A/L சித்தி
(விஞ்ஞானத்துறை, வர்த்தகத்துறை, கணிதத்துறை ஆகிய பாடங்கள் விரும்பத்தக்கது.)
ஆங்கில அறிவு போதியளவு இருத்தல் வேண்டும்.
பெண்கள் அபிவிருத்தி செயற்பாட்டில் ஆர்வமுடையவர்கள்.
கிராம மட்டங்களில் வேலை செய்த அனுபவம்.
மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
வயதெல்லை 22-30.

களநிலை உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக்கொள்ளும் இடம்:

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு - Team Co-Ordinator, Project Manager பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் சுயவிவரக் கோவையை தயாரித்து அனுப்பவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30-05-2003
(C/27995)


## இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மே20

உரும்பிராய்ப் பகுதியில் தளபாடங்களைச் செய்வதற்கான மரங்களை தகுந்த அனுமதியின்றி எடுத்துச் சென்ற இருவரை பொலீஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

மரக் கூட்டுத்தாபனத்தின் அனுமதிப்பத்திரம் இன்றி 3ஆயிரத்து எழுநூற்றுத் தொண்ணூறு ரூபாய் பெறுமதியான தளபாடம் செய்யும் மரங்களை எடுத்துச் சென்றமைக்காக இணுவில் வாசிகளான சிவலிங்கம் சிவநேசம், ராசையா தவனேஸ்வரன் ஆகிய இருவரையும் தலா 500 ரூபா குற்றப் பணமாகச் செலுத்துமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார். (ஒ-8)

## கசிப்பு வழக்கில் பிடியாணை

யாழ்ப்பாணம்,மே20

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் தொடரப்பட்ட வழக்கில் நீதிமன்றில் ஆஜராகத் தவறிய ஒருவருக்கு யாழ்.நீதிமன்ற நீதிவான் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் கேதீஸ்வரன் என்பவருக்கே பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஒ-8)

## கடல்வள மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள்

ஆண்டு 9 தொடக்கம் 12 வரையுள்ள வகுப்புக்களில் கடல்வளம் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கான சமூகக்கல்வி பாடப்புத்தகங்கள் கொழும்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் இருந்து தம்மால் எடுத்துவரப்பட்டு யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளதாகவும் - யாழ்.மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தமது வலயங்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை கல்லூரியில் வந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் -

கல்லூரி அதிபர் இ.செபஸ்ரியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

அத்துடன் இப்பாடப் புத்தகங்களில் ஒரு தொகைப் புத்தகங்கள் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கத்தினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-51)

## நீர்ப்பாய்ச்ச சென்றவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம்,மே20

தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சச் சென்றவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலயப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மகேந்திரன் அஜந்தன் (வயது 15) என்பவரே உயிரிழந்தவராவார்.

நீர் இறைக்கப்போனவர் நீண்ட நேரமாக திரும்பி வராததால் தேடிச் சென்றதாகவும் - நீரிறைக்கும் இயந்திரம் இயங்கிக்கொண்டிருந்த போது குறிப்பிட்ட நபர் அங்கிருக்கவில்லை எனவும் -

சந்தேகத்தில் கிணற்றைப் பார்த்த போது அதனுள் அவர் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும் -

உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. இத்தகவல் பொலீஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அவ்விடத்திற்குச் சென்ற பொலீஸார் சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

நேற்று மரணவிசாரணையை மேற்கொண்ட மல்லாகம் பதில் நீதிபதி வசந்தசேனன் யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார்.

(ஒ-15)


**CHEMISTRY**
Group Classes
By: ந.வாகீசன்
**Inorganic**
துரித மீட்டல் & வினாவிடை
ஆரம்பம் : 20-05-2003
4.30 p.m.
செவ்.) வியா.) 4.30 - 6.00 p.m.
T.P. :071-386450
இராமநாதன் வீதி,
(பல்கலைக்கழகம் முன்பாக)
திருநெல்வேலி.
(18168)



## பூசகர் தேவை

கதிரிப்பாய் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்திற்கு நிரந்தரமாகப் பூசை செய்வதற்கு பிராமண பூசகர் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.
தொடர்பு :
ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலய பரிபாலன சபை,
கதிரிப்பாய், அச்சுவேலி.
(18175)



## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல ஸ்தாபனம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.
1) 40-50 வயதுக்குட்பட்டவராகவும் தமிழ், ஆங்கிலம், சிங்களம் பேசத் தக்கவராகவும் கணக்குகள் வைத்திருக்கத்தக்கவருமான ஒருவர் தேவை.
2) 18-22 வயதுக்குட்பட்டவராகவும் க.பொ.த. (உ/த) படித்தவராகவும் ஓரளவு ஆங்கிலத்தில் தேர்ச்சியுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
சுயவிவரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 1899
மே/பா உதயன்
இல. 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-27994)



## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், வீரியமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!
★ 100% இளமையையும் வலிமையையும் தரும்!

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*MANUFACTURED BY:*
SITHARA PRODUCTS,
PUTTALAM ROAD.
(REG.NO: 6382) AR/PR/No. 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.:222 2567.
(C27864)



சிவமயம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ளதும்,
சைவப் பெருவள்ளலார் சேர் பொன். இராமநாதன்
அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்றதுமாகிய,
## அருள்மிகு பார்வதி அம்பாள் சமேத ஸ்ரீபரமேஸ்வரன் ஆலய
## மகா கும்பாபிஷேக தினவிழா
(மணவாளக்கோல நாள்)
நாளை (21.05.2003) புதன்கிழமை

நிகழ்ச்சி நிரல்
காலை 7.00 மணி : நவோத்தரசகஸ்ர சங்காபிஷேகம்
உபயம் திரு.ச.தணிகாசலம்
(சமாதான நீதிவான்)
நண்பகல் 12.00 மணி: மாகேஸ்வர பூசை
பிற்பகல் 2.00 மணி : திருக்கல்யாணம்
மாலை 4.00 மணி : சுவாமி வெளிவீதி உலாவருதல்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை,
ஸ்ரீபரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை,
இந்துமன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(18170)



## எழுபதாவது பிறந்ததின நினைவலையும் 6ஆம் மாத நினைவான அஞ்சலியும்

மண்மகிழ 20 - 05 - 1933



கண்நெகிழ 21 - 11 - 2002

## அமரர் சின்னத்தம்பி துரைராசா
*(கிருஷ்ணபிள்ளை - கனடா)*

மாதங்கள் பறந்தோடிப் போயென்ன – எம்
மனைதனில் உங்கள் நினைவு போய்விடுமா?
நெஞ்சுள்ள வரை நினைவிருக்கும் – எம்
உயிர் உள்ள வரை உணர்விருக்கும்.

*"கனகம்மா இல்லம்", கரவெட்டி.*
*"சரஸ்வதி இல்லம்", மீசாலை.*
(18171)
மகன்,மருமகள்,
உறவினர், அயலவர்.

# வீட்டுக்கொரு 'வாழை'

இன்று யாழ்.மாவட்டத்தில் விவ சாய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோரின முக்கிய விவசாயப் பயிர் வாழை எனக் கூறினால் அது மிகையாகாது. இதற்கு முக்கிய காரணம் வாழைச்செய்கைக் கான பராமரிப்புச் செலவு குறைவாக இருப்பதாகும். இரண்டாவது கார ணம் இது நீண்ட காலத்துக்குப் பயன்தரும் ஒரு பயிர்வகை என்பதா கும்.

பெருகுகிறது. இது ஒரு மீற்றர் முதல 10 மீற்றர்வரையில் ஓங்கி வளரக் கூடியது. இதன் வளர்ச்சி வாழை யின் இனம் மற்றும் தரைத்தன்மை என்பவற்றுக்கேற்ப மாறுபடும். வாழை இனத்தில் நூற்றுக்கு மேற்பட்ட இனங்கள் உண்டாயினும் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் குறிப்பிட்ட சில இனங்களே பயிராகின்றன.

கற்பகதரு எனப் பனையை அழைப்



விவரமாகச் சொல்லுவதானால் வாழைச் செய்கையை ஆரம்பிக்கும் தருணத்தில் பயிர்நாட்டலுக்கு கணிச மான ஒரு தொகைப்பணம் செலவிட நேர்வதுடன், ஆரம்பத்தில் இயற்கை பசளையிடலுக்காகவும் கணிசமான பணத்தை செலவிட நேர்கிறது.

ஆனால், அதன் பின்னர் சிறு

பதற்குக் காரணம் அதன் சகல பகுதிகளும் மனிதனின் தேவைகளுக் குப் பயன்படுவதாலாகும். அந்த வகையில் வாழையையும் கற்பகதரு வாகக் கருதக்கூடிய வகையில் வாழை மனிதருக்குப் பல அரிய பயன்களைத் தருகின்றது.

வாழையின் கிழங்கு, தண்டு, பூ,

யாழ் மாவட்டத்தில் கப்பல், இதரை, கதலி, ஆனைவாழை, மொந்தன் எனப் படும் கறிவாழை, மருத்துவ வாழை மற்றும் செவ்வாழை ஆகிய இன வாழைகளே பயிர் செய்யப்பட்டு வருகின்றபோதும் இவற்றில் கதலி இன வாழையே பெருமளவில் பயிரா கின்றது.

தாவர இனத்தில் வாழைப்பழம் மியூசா சபியெண்டம் (Musa Sapi entum) என்ற பெயரால் குறிப்பிடப் படுகின்றது.

வாழைப்பழம் முக்கனிகளில் ஒன றெனக் கொள்ளப்படுகிறது. சிறுவர் முதல் பெரியோர் வரை எந்த வயதி னரும் உண்ணக்கூடிய பழவர்க்கம் இது. இது எல்லாப் பருவகாலங்களி லும் கிடைக்கின்றது.

இரும்புச் சத்து, கல்சியம், தாமிரம், அயோடின், மாங்கனிஸ், துத்தநாகம், பொட்டாசியம், சோடியம், மக்னீசியம், பெக்டின், டானின் மற்றும் உயிர்ச் சத்துக்கள் ஏ,பி,சீ,டி மற்றும் ஈ ஆகி யன வாழைப்பழத்தில் அடங்கியுள் ளன. இது மலச்சிக்கலுக்குச் சிறந்த நிவாரணி. குடற்புண்களை அகற்ற வல்லது. அத்துடன் சமிபாட்டுக்கு உறுதுணை புரிகின்றது.

பொதுவாக எல்லா இன வாழைப் பழங்களுக்கும் வியாதியைப் போக் கும் சக்தி உண்டு.

நிறம், சுவை, குணம், உருவ அமைப்பு மற்றும் தோற்கனதி ஆகிய வற்றில் வாழைப்பழ வகைகளில் வேறுபாடு காணப்படுகிறது.

பச்சைநாடான் வாழை இனத்துக்கு மட்டும் வியாதியைக் குணப்படுத்தும் தன்மை கிடையாது. செவ்வாழை இனம் மருத்துவக் குணங்கள் கொண் டது. செவ்வாழைப்பழம் உடம்பிலுள்ள கிருமிகளை அகற்றும்; தொற்று நோயைக் கட்டுப்படுத்தும்.

கின்றது.

நல்ல சூரிய வெளிச்சமும் நீர்ப் பாசன வசதியும் இப்பயிர் வளருவதற்கு அவசியமானவையாகும். யாழ். குடா நாட்டில் களரோ, உவரோ இல்லாத நல்ல வடிகால் வசதி மற்றும் மண் வளம் உள்ள நிலங்களில் இப்பயிர்ச செய்கை நல்ல பலனைக் கொடுக் கிறது. அந்த வகையில் செம்மண் வளமிக்க வலிகாமம் பகுதியிலேயே இது பெருமளவில் பயிர் செய்யப் படுகிறது. பிரதானமாக, நீர்வேலி, கோப்பாய், புத்தூர், நிலாவரை, உரும்பிராய், ஊரெழு, புன்னாலைக் கட்டுவன், சுன்னாகம் ஆகிய பகுதி களில் பெரும்பாலான விவசாயி களின் முக்கி யிர்ச் செய்கையாக இது இருந்து ,வதை அவதானிக் கக் கூடியதாகவுள்ளது. அதைவிட மற்றும் பல பகுதிகளிலும விவசா யிகள் தம் கடின உழைப்பின் மூலம் இப்பயிரினால் நல்ல பலன் அடை கின்றனர். யாழ்.குடாநாட்டில் கணிச மானதொரு நிலப்பரப்பில் வாழை பயிரிடப்படுகின்றது.

பெரிய கிழங்குடன் கத்திபோன்ற தோற்றம் தரும் இலைகள் உள்ள 3 முதல் 4 மாத வளர்ச்சியுடைய நோய்த் தாக்கமற்ற, ஆரோக்கிய மான வாழைக்குட்டிகளைத் தேர்ந் தெடுத்தல் அவசியம்.

உழுது குப்பை போட்டுப் பண் படுத்தப்பட்ட நிலத்தில் 1 1/2 அடி ஆழமுள்ள குளிகள் தோண்டப்பட்டு பத்து முதல் இருபது நாள்கள் வரை ஆறவிட்டபின் 'செரகான்' கல வையில் நனைத்து நடுதல் நன்று.

நடுவதற்கு முன் 'பூரடான்' குரு ணையை குழியினுள்ள மண்ணுடன் கலந்துவிட்டால் பூச்சி, தூர்ப்புழுத் தாக்குதல் ஏற்படாமல் பாதுகாக்க லாம்.

ஆனால்,சாதாரணமாக இப்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் இந்த ஆரம்ப முன்னேற்பாடுகள்பற்றி அதிக அக்கறை எடுத்துக் கொள்வ தில்லை. அவர்கள் காலநிலையைக் கருத்திற்கொண்டு, மழை தேங்கி நிற்கும் மாரி காலத்தைத் தவிர்த்து மற்றைய காலங்களில் தத்தமது வசதி

பாதிப்பு ஏற்படுகின்றது.

**★வாழைத் தண்டுத் துளைப்பான் அல்லது சாம்பல் வண்டுத் தாக் கம் :-**

இதற்கு பி.எச்.சீ. 10 வீத மருந்தை ஒவ்வொரு குழியிலும் வாழைக் குட்டியை நடுவதற்கு முன்னர் 50 கிராம் வீதம் குளியிலிட்டு கன்றை நடுதல் இத்தாக்கம் ஏற்படாமல் தடுக்கும்.

**★ முடிகொத்து நோய் (Bunchy Top):-**

இது ஒரு வைரஸ் நோய். அசு வினிப் பூச்சிகளால் இது பரவுகின் றது. மரம் வளர்ச்சி குன்றி குட்டை யாகக் காணப்படும். இலைகள் இள மஞ்சள் நிறமாக மாறி ஓரங்கள் வளைந் தும் சுருண்டும் மொரமொரப்பாக இருக கும். பாதிக்கப்பட்ட இலைகள் முற் றும் வெளி வராமல் ஒருங்கே தொண டையில் அடைத்து கொத்தாய் நிற்கும்.

பாதிக்கப்பட்ட மரத்தை கவன முடன் முழுமையாக அகற்றி எரித்து விடுதலே இந்நோய் மற்றைய மரங் களைப் பாதிக்காது தடுக்கும் வழி யாகும்.

**★வாழைக் கண்ணாடி இறக் கைப பூச்சி :-**

இவை வாழையின் அடியில் கூட்ட மாக இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சி பயிரைத் தாக்கும். இதற்கு ரோசார் 100 மில்லிகிராமை 100 லீற ற்ர் தண்ணீரில் கலந்து மரத்தின் அடிக்கு தெளித்தல் பலனளிக்கும்.

**★ இலைப்புள்ளி நோய் :-**

சிறிய இள மஞ்சள் புள்ளிகள் இலைகளில் தோன்றும். இவை நீண்ட வட்டப் புள்ளிகளாக வளர்ந்து இலை ஒடிந்து விழும்.

இதற்கு 'டைடலான்' அல்லது 'குப்ராவிட்' 400 கிராம் மருந்தை 100 லீற்றர் நீரில் கலந்து 10 நாள் களுக்கு ஒருமுறை இருதடவைகள் தெளிப்பின் பலன் கிடைக்கும்.

இக்கிருமித் தாக்கங்களால் அதிக பாதிப்பு ஏற்படாத போதிலும், வாழைச செய்கையாளர்களை பெரிய அள வில் பாதிப்பது இயற்கைப் பாதிப்

# பயிரிட்டு பயன்பெறுவோம்

## கமமும் புலமும்

பயிர்ச் செய்கைகளுக்காக செலவிடும இரசாயன உரவகைகளோ, கிருமி நாசினி வகைகளோ இப்பயிர்வகைக் குப் பாவிப்பதில்லையாதலால், அவற றுக்கான செலவு இப்பயிர்செய்கை யால் ஏற்படுவதில்லை. அதுமட்டு மன்றி சிறுபயிர்ச் செய்கையின் போது அடிக்கடி மேற்கொள்ளப்பட வேண் டிய மண் அணைத்தல், களையெடுத தல் ஆகியவற்றுக்கான கூலிச்செலவு இப்பயிர்ச்செய்கைக்கு ஏற்படுவதில்லை. இவையும் இந்தப் பயிர்ச் செய்கைக் கான விசேட காரணங்களாகும்.

அத்துடன், வாழைப்பயிர்ச் செய் கையை ஆரம்பித்து முறையாகப் பராமரித்துவரின், நீண்டகாலத்துக்கு பலன்பெற இயலுமென்பதும் இவ்வித பலனை வேறெந்த பயிர்வகையிலும் பெற்றுக்கொள்ள இயலாதென்பதும் முக்கியமாகக் கவனத்தில் கொள் ளப்பட வேண்டியதாகும்.

இனி இப்பயிரின் பூர்வீகம் தொடர் பாக கவனிப்போம் இது பி.என் மியூசா பரடிஸ்ஸியாகா (B.N.Musa paradi- siaca) என்ற பயிரினத்தைச் சேர்ந்த தாகும். இப்பயிர்வகை பற்றி புராதன ஹிந்து, சீனா, கிரேக்க மற்றும் ரோமா னிய இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டிருப்பதில் இருந்து இதனது தொன்மை புரிகிறதல்லவா? இப்பயிர் அரேபியர்களால் ஆபிரிக்காவில் பூமத திய ரேகையை ஒட்டிய பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டது.

பின்னர் போர்த்துக்கேயரால் அட் லாண்டிக் கடலைக்கடந்து கேனரித் தீவுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வாழை உற்பத்தியில் முன்னணி வகிப் பவை பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளாகும்.

வாழை ஒரு மரமல்ல; அது உயரமாக வளரும் ஒரு செடிவகை என்பதே தாவரவியலாளர்களின் கருத் தாகும். தரை அடியிலுள்ள வாழை யின் கிழங்கிலிருந்து இலைகள் துளிர்த்து வளர்வதால் இவ்வினம்

காய் மற்றும் வாழைப்பழம் ஆகியன உணவாகவும் பல நோய்களைத் தீர்க்கும் மருந்தாகவும் மனிதரால் பாவிக்கப்படுகின்றன. வாழைத் தண் டின் நார்ப்பாகம் வயிற்றில் நம் உணவுடன் கலந்து உட்சென்று தங்கியுள்ள கற்களையும் ரோமத் தையும் இலகுவாகக் கரைத்து வெளி யேற்றும் தன்மை வாய்ந்தது. எனவே, குடற்சுத்தத்துக்கு நாம் இடையிடையே வாழைத் தண்டை உணவோடு சேர்த் துக்கொள்ள வேண்டும். வாழைத் தண டின் சாறு விஷத்தை முறிக்கும் தன்மை கொண்டது.

வாழை இலையில உணவு உண் பது இந்து சாஸ்திர ரீதியாகவும் மருத்துவ ரீதியாகவும் சிறந்தது. வாழைப்பூ சாதாரணமாகச் சமையலுக கும் பாவிக்கப்படுகின்றது. மருத்துவக குணமும் இதற்கு உண்டு. வாழைக் காய் உணவு வகைகளில் கறியாக, கூட்டாக, வறுவலாக மற்றும் பொரிய லாக உபயோகிக்கப்படுகிறது.

இயற்கை வைத்திய முறைப்படி வாழைமட்டை அல்லது தடல் மற்றும் பட்டை எனக் குறிப்பிடப்படும் பகு தியை பிழிந்து அதன் சாற்றை விஷக் கடிக்கு விஷம் முறிக்கும் மருந்தாகக் கொடுப்பர். இது சிறுநீர்க் கோளாறு களுக்கும் இயற்கை வைத்திய முறை யில் மருந்தாகப் பாவிக்கப்படும்.

நெருப்புக் காயங்களை ஆற்றும் ஆற்றல் வாழைச் சாற்றுக்கு உண்டு. பச்சை வாழைப் பட்டையில் வெற் றிலை, பூ, பூமாலை, மற்றும் முருங் கைக்காய் ஆகியவற்றைச் சுற்றி வைப்பதன் மூலம் அவை வாடிப் போவதினின்றும் பாதுகாக்கப்படுகின் றன. வெறுமனே கழிவாகிப் போகும் வாழைநார் கூட பூக்களை மாலையாகத் தொடுக்கவும், காய்ந்த வாழை மடல் களுள் பாதுகாக்கப்படும் சுருட்டுக் கட்டு, ஊறுகாய், மூக்குப்பொடி ஆகிய வற்றைப் பொதிசெய்யவும் பாவிக் கப்படுகிறது.

வாழைப்பழத்தில் ஐந்தில் ஒரு பாகம் சர்க்கரை. இச்சர்க்கரை பழச் சீனியாக மாறி எளிதில் சமிபாடு அடைவதால் நீரிழிவு நோயாளர் களும் வாழைப்பழத்தைச் சாப்பிட லாம். இருதய நோய் உள்ளவர்களும சாப்பிடலாம் ஏனெனில், இதில் கொழுப புச் சத்துக் கிடையாது. வாழைப்பழத தைத் தொடர்ந்து சாப்பிட்டு வருப வர்களுக்கு குடற்புண் (Stomach Ulsers) பாதிப்பு ஏற்படுவதில்லை. தினசரி வாழைப்பழம் சாப்பிட்டு வருவதால், பல நோய்கள் மனிதனை அணுகாது. இரத்த அழுத்தம் நிதான மாக இருக்கும். உடலின் சமநிலை பேணப்படும்.

தமிழர் தம் பண்பாட்டில் வாழைப் பழத்துக்கு முக்கிய இடம் அளிக்கப் படுகிறது. தமிழ்ப் பண்பாட்டு முறை களில் வாழைப்பழம் பூசை, மங்கள காரியங்கள் மற்றும் வரவேற்பு, பாராட்டு



ஆகிய பண்பாட்டு நிகழ்ச்சிகளிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இதனை கணிசமான விலையில் பெற்றுக்கொள்ள இயலுமாதலால் இது ஏழை எளியோரின் 'அப்பிள்' எனக் கருதப்படுகிறது. இதன் சிறப்புக் காரணமாகவே நம் முன்னோர் இதற்கு முக்கியத்துவம் அளித்து வந்தனர்.

மாச்சத்தும் புரதமும் கொண்ட வாழைப்பழம் மூலநோயைக் கட்டுப் படுத்துவதோடு, தோல் வியாதிகளை யும் குணப்படுத்தும் தன்மை கொண் டதென வாழைச் செய்கையில் அனு பவமுள்ள விவசாய நண்பரொருவர் தெரிவித்தமை ஞாபகத்துக்கு வரு

களிற்கேற்ற விதத்தில் இப்பயிர்ச் செய்கையை ஆரம்பிப்பதைக் காண முடிகின்றது.

அதுமட்டுமன்றி வாழைக்குட்டி களை நட்டு, அவை வளர்ந்து பலன் தரு காலமான 6 முதல் 8 மாத வரை யான காலத்துக்கு நீர்ப்பாய்ச்சுதல் செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள் ளும் நோக்கில் அந்நிலப் பரப்பில் வெங்காயம், இராசவள்ளி மற்றும் சில சிறு பயிர்ச் செய்கைகளையும் மேற்கொள்வதால் இரட்டிப்பு இலாபம பெறக்கூடிய வழி முறைகளை இன் றைய விவசாயிகள் வெற்றிகரமாக மேற்கொண்டு பலன் பெறுகின்றனர்.

வாழைப் பயிர்ச்செய்கைக்கு தொழு உரம் முக்கியமானது. இதுவே வாழை யின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவ தோடு, ஆரோக்கியமான வாழைக் குலையை ஈவதற்கும் உதவுகின்றது.

பெரும்பாலும், குப்பை எருவை முதற்தடவையாகப் போட்டு உழுது பயிரை ஆரம்பிக்கும் விவசாயிகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் குடா நாட்டிலோ அல்லது வன்னிப் பிர தேசங்களிலிருந்தோ பெற்றுக் கொள் ளும் இயற்கை எரு இட்டு வரு வதன் மூலம் இப்பயிர்ச் செய்கை யில் நற்பலன் பெற முடிகின்றது.

வாழைப்பயிர்ச் செய்கைக்கு இடை யீடின்றிக் குறித்த கால இடை வெளியில் நன்னீர் பாய்ச்சுதல் மிக அவசியமாகும்.

இவ் வாழைப் பயிர்ச் செய்கைக்கு சில குறிப்பிட்ட நோய்த்தாக்கங்களால

பாகும். ஒரு சில நிமிடங்கள் வீசும் கடும் காற்றினால் பெரிய அளவி லான சேதத்தை இப்பயிருக்கு ஏற் படுத்திவிட முடியும்.

அண்மையில் அதாவது சென்ற வாரம் ஒருசில நிமிடங்களே நீடித்த கடும் சுழல் காற்றொன்றினால் வலி காமப் பிரதேசத்தில் பல வாழைத் தோட்டங்களில் இன்னும் ஓரிரு மாதங் களில் நல்ல பலன் தரக்கூடிய நிலை யிலிருந்த வாழை மரங்கள், வாழைக குலைகள் அரைகுறையாக முற்றிய நிலையில் சுழல்காற்றின் தாக்கத் தால் பாதிக்கப்பட்டமையை நாம் காணநேர்ந்தது.

**தொகுப்பு: அரவிந்த்**

வாழைச் செய்கையாளர்களுக்கு மற்றொரு வகைப் பாதிப்பாக அமை வது சந்தை வாய்ப்பு என்று சொன் னால் அது மிகையாகாது. நவீன தொழில்நுட்ப வசதிகள் ஏற்பட்டுள்ள இன்றைய நிலையிலும் இப்பயிர்ச் செய்கையைப் பொறுத்தவரை வாழைக் குலைகளை பாதுகாத்து வைக்கவோ அன்றேல் வாழைப்பழங்களைக் கொண்டு வேறு கைத்தொழில் உற் பத்தி முயற்சிகளை மேற்கொள்ளவோ எவ்வித முயற்சிகளும் வெற்றிய ளிக்கவில்லை. இதன் காரணமாக, யுத்தகாலச் சூழ்நிலையில் தமது விளைபொருளை நியாயமான விலைக்கு விற்கமுடியாத நிலையில் பல வாழைப் பயிர்ச் செய்கையாளர் கள் தமது உற்பத்தி முயற்சி களைக் கைவிட நேர்ந்தது.

ஆனால், இன்று யாழ். குடா நாட்டிலிருந்து ஸ்ரீலங்காவின் ஏனைய மாவட்டங்களுக்குப் போக்குவரத்து வசதிகள் இலகுவாக மேற்கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாகியிருப் பதையடுத்து யாழ்.குடாநாட்டு வாழை உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பு கணிசமான அளவு அதி கரித்திருப்பதை மறுக்க முடியாது.

அது மட்டுமன்றி வெளி மாவட் டங்களிலிருந்த இயற்கை எரு தரு விப்பதில் உள்ள சிரமங்கள் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டுச் சிரமம் ஆகியன நீங்கியிருப்பதால் யாழ் குடாநாட்டு வாழைப் பயிர்ச்செய்கை யாளர்கள் இப்பயிர்ச் செய்கையில் உற்சாகத்துடன் ஈடுபட்டுப் பலனை டையக்கூடிய தருணம் இதுவே யாகும். ☆

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு / காணி தேவை

யாழ்ப்பாணத்தில் மாநகரசபை எல்லைக்குள் 5-10 பரப்புடைய காணி/ வீடு உடன் தேவைப்படுகின்றது. தொடர்பு: I.T.I. 3791/2, Galle Road, Colombo - 06. T.P.: 075-554973.
(சி-27990)

யாழ்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவன் குடும்பத்துடன் தங்குவதற்கு திருநெல்வேலியில், பல்கலைக்கழகத்திற்கு அண்மித்த பகுதியில் சகல வசதிகளுடனும் வீடு தேவைப்படுகின்றது. நியாயமான வாடகை தரப்படும். தொடர்பு: T.P.: 2263267, 0777 739410 (சி-27989)

## திருமண சேவை

அரச ஓய்வூதியம், காணிகள், வீடுகள்மூலம் வருமானம் உடைய வருக்கு 45 - 55 வயதிற்குள் வசதிகள் குறைந்த கைம்பெண் மணமகளாகத் தேவை. தொடர்பு: துரை விமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(18152)

1964, பூசம், செவ்வாய் 4, M.B.B.S. Doctorஇற்கு அரச துறை அல்லது தனியார் துறையில் படித்த, பண்பான மணமகள் தேவை. துரை விமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(18151)

## வீதி திருத்தும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே20

நல்லூர் பிரதேச சபை தனது சபை நிதிமூலம் கோண்டாவில் கிழக்கு செபஸ்தியார் ஆலய வீதி, கோண்டாவில் மேற்கு வீதி, கோண்டாவில் மேற்கு முத்தட்டு கிளை வீதி ஆகிய வீதிகளைத் திருத்தியமைக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

இதேவேளை -

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அண்மையாகச் செல்லும் வீதியில் உள்ள சேதமடைந்த மதகு திருத்த வேலையும் நல்லூர் பிரதேச சபையால் மேற்கொள்ளப் படவுள்ளது.

(ஒ-69)

## தேவை

- ☆ பில் கிளாக்
- ☆ சப்பிளையர்
- ☆ சமையல் உதவியாளர்கள்

உடன் தேவை.
தொடர்பு:
**றொலெக்ஸ் ஹொட்டல்**
இல. 340, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(18163)

## மேசைத் தொலைபேசிகள் விற்பனைக்கு

எந்தப் பிரதேசத்திற்கும் சிக்கலில்லாமல் தெளிவாக உரையாடக்கூடிய முறையில் இணைப்புக்கள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு : T.P. : 070 213074, 0777- 589107
துவாரகை தொலைத்தொடர்பு நிலையம்

T.P. : 0777-570244, 0776-005555
கதிரேசன் வீதி, கொழும்பு - 13.

(18035)

## மணிவிழா வாழ்த்து



எமது பாடசாலையில் 16 வருட காலமாக
ஆசிரியராகவும் உப அதிபராகவும்
கடமையாற்றி இன்று அகவை அறுபதைப்
பூர்த்திசெய்து மணிவிழாக்காணும்
எமது அன்பிற்கும்
மதிப்பிற்குமுரிய ஆசிரியர்
**திருமதி**
**இராஜேஸ்வரி இரகுநாதன்**
அவர்கள் பல செல்வங்களும் பெற்று
பல்லாண்டு காலம் சீருஞ் சிறப்புமாக வாழ
பொஸ்கோ சமூகத்தினராகிய நாம்
மனதார வாழ்த்துகின்றோம்.

யா/புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயம்,
றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (சி-27988)

அதிபர்,
ஆசிரியர்கள்.மாணவர்கள்,
பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடி 23 - 10 - 1927



ஆண்டவன் அடி 20 - 05 - 2000

### அமரர் அரியகுட்டி சித்திரவடிவேலு

(உரிமையாளர், குகன் ஸ்ருடியோ, சாவகச்சேரி)

நல்ல ஆரோக்கியமாய் பல காலம் வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
தன்னை ஒரு மெழுகுவர்த்தி போல் ஆக்கி
எம்முடனிருந்து இல்லச்சுமைகளையும்
இன்ப துன்பங்களையும் பகிர்ந்த தெய்வமே!
எமக்கு என்றும் ஒளி விளக்காய்
வழிகாட்டும் உங்கள் பாதாரவிந்தத்தில்
உள்ளம் குமுற கண்கள் குளமாக
இந்த மூன்றாம் ஆண்டில் எமது
இதய அஞ்சலிகள்.

குகன் ஸ்ருடியோ,
சாவகச்சேரி. (18164) - குடும்பத்தினர்.

## CEYLON MEDICAL COLLEGE COUNCIL PHARMACIST'S EXTERNAL EXAMINATION COURSE

இடம் : சாய்ராம் பார்மசி கல்வி, பட்டப்படிப்புகள் கல்லூரி, இல. 57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஆரம்பமாகும் திகதி : 27-05-2003 செவ்வாய்க்கிழமை மு.ப.9.00 மணி

மொழிமூலம் : ஆங்கிலம்
(தேவையான சந்தர்ப்பங்களில் தமிழும் உபயோகிக்கப்படும்)

வயது : எல்லை இல்லை

ஆகக் குறைந்த தகைமை : க.பொ.த. (சா/த) ஒன்று அல்லது இரண்டு தடவைகளில் சித்தியெய்தியிருக்க வேண்டும். விஞ்ஞானம் அல்லது சுகாதாரத்தில் விசேட சித்தி (Credit) ஆங்கிலம், கணிதம் ஆகியவற்றில் சாதாரண சித்தி.

க.பொ.த. (உ/த) இரசாயனவியல் அல்லது பௌதிகவியல் அல்லது தாவரவியலில் விசேட சித்தி (Credit) தேவைப்படுகின்றது.

- ❖ க.பொ.த (உ/த) விஞ்ஞானத்துறை மாணவர்கள் இந்தப் பயிற்சி நெறியைப் பின்பற்றலாம்.
- ❖ மேற்கு நாடுகளின் மருந்துகள் பற்றி அறிவும் விவரமும் பெற விரும்புவோரும் இதனைப் பின்பற்றலாம்.

பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்களை அல்லது மலதிக விவரங்களைப் பெற விரும்புவோர் தயவுசெய்து நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

**இல.57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
(இலங்கை வங்கி முன்பாக)
27-05-2003 காலை 9 மணிக்குப் பின்.

தபால்மூலம் தொடர்புகொள்வோர் : நடராஜா இராசநேரு
பார்மசி விரிவுரையாளர்
சாய்ராம் பார்மசி கல்வி,
நெல்லண்டை வீதி, பருத்தித்துறை.

(17897)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 26 - 12 - 1920



மறைவு 20 - 04 - 2003

### அமரர் சபாபதிப்பிள்ளை மகாலிங்கம்

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன?
ஆலமரமாய் நீங்கள் இருக்க
அதன் விழுதுகளாய் நாம் இருந்தோம்.
ஆலமரமும் சாய்ந்தது ஆனந்தமும் பறிபோனது!

20-04-2003 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (20-05-2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அப்போது நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தபாற்கந்தோர் வீதி,
முதலாம் ஒழுங்கை, கற்குழி,
சாவகச்சேரி. (18123)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## முதலாவது வருட நினைவலைகள்



### திருமதி சந்தியோ மரியம்மா (பூவதி)

மலர்வு 02-06-1948 | உதிர்வு 20-05-2002

அம்மா!
எங்கள் வானத்து விடி விளக்கே!
என்றும் எங்களின் குல விளக்கே!
சந்தனத்துக் குளிர்ச்சியும் செந்தமிழ் எழுச்சியும்
தந்தெமக்கு நிமிர்ச்சி தந்த தமிழ்த் தாயே!
தன்னலமற்ற தூய அன்புத் தடாகமே!
எங்கே போனீர்கள்?
விழுதுகள் நிலத்தைத் தொடும் வேளையில்
ஆலம் விருட்சம் நீங்கள் சரிந்து
விட்டீர்களே அம்மா!
அமைதி கொள்ளுங்கள் தாயே!
ஆண்டவன் காலடியில்!

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்கான திருப்பலிகள் இன்று (20-05-2003) செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு நாவாந்துறை புனித மரியாள் ஆலயம், பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயம், கொழும்பு செட்டித்தெரு வியாகுல அன்னை ஆலயம் ஆகியவற்றில் நடைபெறும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், தாய், சகோதரர், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

6/5, 3ஆம் குறுக்குத் தெரு,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம். (18114)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 - 11 - 1931



மறைவு 25 - 05 - 1992

### அமரர் க.லம்போதரன்

(ஓய்வுபெற்ற அரச கணக்காளர்)

திதி : 20-05-2003

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எமக்கு
வழிகாட்டியது அன்று
எம் நெஞ்சத்துள் தெய்வமாய் இருந்து
வழிகாட்ட வேண்டும் இன்று
என விநாயகரையும் வீரபத்திரரையும்
பிரார்த்திக்கும்:

126/4, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
மீசாலை.

- குடும்பத்தினர்.
(17838)

## அச்சுவேலியில்

CIIT யின்

- Dip in Ms Office
- Corel Draw
- Page Maker

கணனி வகுப்புகள்
19.05.2003 திங்களன்று
ஆரம்பமாகியுள்ளன.
உடன் அலுவலகத்தில்
தொடர்பு கொள்ளவும்.

Director,
ஆங்கிலக் கல்லூரி,
சந்நிதி வீதி, அச்சுவேலி.
(18190)



இணுவில்
## பொருளியற் கல்லூரி
கே.கே.எஸ்.றோட் - இணுவில்

**SPOKEN ENGLISH**
Lecturer: With Grammar
**By: Nishanthan**
(Dip.in.English)

புதிய பிரிவு ஆரம்பம்

21.05.2003
புதன 4.00 p.m. (ப.நே.)

Note:- நீங்கள் சுடுமாட விளக்கத்துடன் சுயமாக எழுத, இலகுவாகப் பேச, வாசிக்க மாதத்தில் Grammar உடன் முடித்துக் கொள்ளப்படும்.

கவனத்திற்கு:
யாழ் பொருளியல் கல்லூரியில் சனி, ஞாயிறு - 2.00 p.m. (ப.நே.) ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
(C/27998)


## திருநெல்வேலி
### பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருக்கோயில்
### சங்காபிஷேகம் (1008)

நாளை (21.05.2003) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூஜையும் தொடர்ந்து வசந்த மண்டப பூஜை நடைபெற்று பஞ்சமுக விநாயகர் உற்சவம் நடைபெறும்.

மாலை 5.30 மணியளவில் பூஜையைத் தொடர்ந்து, வசந்த மண்டப பூஜை நடைபெற்று எழுந்தருளி உற்சவம் நடைபெறும்.

விளம்பர அனுசரணை: கனகா பத்திரிகை விற்பனை நிலையம்,
திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி.
(C/27999)

# TENDER NOTICE
## MINISTRY OF HOUSING AND PLANTATION INFRASTRUCTURE
### DEPARTMENT OF BUILDINGS

1. The Chairman Divisional Tender Board, Department of Buildings, Jaffna. will receive sealed tenders for Making and Fixing of Aluminium doors, windows and fanlight at External Exam Unit, University of Jaffna up to 10.00 A.M. on 27.05.2003

2. Tender forms are available for collection with Chief Engineer (Jaffna), Department of Buildings, Beach Road Jaffna up to 3.30 P.M. on 22.05.2003

3. Tenders will be opened immediately after the closing at the Chief Engineer's office, Department of Buildings, Beach Road, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

4. Tender forms will be issued only to those Who possess prior experience in the above field for the last five years. Documentary evidence shall be annexed.

5. sealed tenders may be dispatched either by registered post or hand delivered to the Chairman, divisional Tender Board, Department of Buildings, Beach Road, Jaffna.

Chief Engineer,
Department of Buildings,
Beach Road, Jaffna.
(C/27996)


## Shakthi Home Science Academy
### டிப்ளோமா பயிற்சி வகுப்புகள்

- ★ நவீன தையல் பயிற்சி
- ★ பெயின்ரிங் (... பெயின்ரிங், சாறி பெயின்ரிங், கிளாஸ் பெயின்ரிங்)
- ★ கெயர் ஸ்ரைல் (50 வகை)
- ★ வைற்றிளிங் பேசியல் மணப்பெண் அலங்காரம்
- ★ கிறிஸ்டல் சிப்பி வேலை
- ★ நிற்றிங் (பின்னல் வேலை)
- ★ (F) வொண்டன் ஐசிங், சுகர் பிளவர், கேக் ஐசிங்
- ★ முத்து வேலை, பேப்பர் றோஸ்
- ★ சொவ்ற் ரொய்ஸ் (பொம்மை வகைகள்)
- ★ ஸ்கிறீன் பிறின்ரிங்
- ★ பத்திக் பெயின்ரிங்

வகுப்புக்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

- ★ மருதாணியிடல், கைவேலை வகுப்புக்கள் இலவசமாக கற்பிக்கப்படும்.

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**ஆ.பவானி,**
138/3 மனோன்மணி அம்மன் கோயில் முன்பாக,
கோயில் வீதி(வடக்கு), நல்லூர்.
(18181)


## இளவாலை புனித ஹென்றியரசர்(புனித ஜோசப்) விடுதிச்சாலை
### மாணவர் கவனத்துக்கு

மேற்படி விடுதிச்சாலை தவிர்க்கமுடியாத காரணத்தினால் இரண்டாம் தவணைக்காக 25.05.2003 (ஞாயிறு) தினமே ஆரம்பிக்கப்படவுள்ளதால் அன்றைய தினமே மாணவர்களை விடுதிச்சாலைக்கு சமுகந்தருமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு : மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் மட்டும் 21.05.2003 (புதன்) சமுகந்தரவும்.

(18172) - விடுதிக் காப்பாளர்.


## உரவகைகள் விற்பனைக்குண்டு

யூரியா, அமோனியா, NO.1 V வன், வெங்காயக் கலவை உரம், மிளகாய் கலவை உரம், T.D.M. மற்றும் உரவகைகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**M.L. & Co.**
235, 237, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P: 222 2506
(18174)


## சமயசந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 20

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பார்வதி அம்பாள் சமேத ஸ்ரீபரமேஸ்வரன் ஆலய மகாகும்பாபிஷேக தினவிழா நாளை புதன் கிழமை நடைபெறும்.

அன்று காலை 7 மணிக்கு நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் பிற்பகல் 2 மணிக்கு திருக் கல்யாணமும் இடம்பெறும். (எ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 20

யாழ். வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி பஞ்சமுக விநாயகர் தேரில் எழுந்தருளும் காட்சியும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறும் (எ)

## 3கைதிகள் நிலை கவலைக்கிடம்

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழ்க்கைதிகள் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மஸ்கெலியாவைச் சேர்ந்த சகோதரர்களான இராசையா ரவீந்திரன், இராசையா சுரேந்திரன் ஆகியோரினதும் மட்டக்களப்பைச் சேர்ந்த கிருஷ்ணன் சிவரஞ்சன் என்பவரதும் உடல் நிலையே மோசமடைந்திருக்கிறது.சிறைச் சாலையின் கூரைமீது அமர்ந்து கடந்த ஒருவாரமாக இவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.


## உடன் தேவை

யாழ்.நகரில் இயங்கும் சாப்பாட்டுக் கடைக்கு
- ★ கொத்துரொட்டி தயாரிப்பாளர்
- ★ Tea மேக்கர்
- ★ உணவு தயாரிப்பாளர்

தேவை.
வி.இலக்கம் 1901
மே/பா உதயன் பணிமனை
யாழ்ப்பாணம்.
(18195)



## தேவை

மில் வேலையில் அனுபவம் உள்ளவரும் பயிலுநரும் தேவை.

தொடர்பு:
**பிருந்தா மில்ஸ்**
No.18, நக்கா றோட்,
யாழ்ப்பாணம்.
(18194)



**நாகம்ஸ்** சுன்னாகம்



சரத்குமார், சிம்ரன், கிரண், ரோஜா நடித்த
**அரசு** (சினிமா)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (ப.நே.)
(18180)

**ராஜா** யாழ்ப்பாணம்

இளையதளபதி விஜய், மீராஜஸ்மின்



**புதிய கீதை**
காட்சிகள் :10.30, 2.30, 6.30,
சனி, ஞாயிறு 9.30
(C/27626)

**லிபேட்டி** அச்சுவேலி



விஜயகாந்த், சிம்ரன், விவேக நடித்த
**ரமணா** (சினிமா)
காட்சி நேரம் :
11.00, 3.00, 7.00 (புதிய நேரம்)

**நிரஞ்சனாஸ்**

ரஜனி,ரம்பா, சௌந்தர்யா நடித்த
**அருணாச்சலம்** (சினிமா)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (ப.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
**CASTAWAY**

**லஷ்சுமி சினிமா**
(இணுவில்)
நடிகர் திலகம் சிவாஜிகணேசன், பத்மினி, பாலையா, தங்கவேலு மற்றும் பலர் நடிப்பில்
**தில்லானா மோகனாம்பாள்**
11.00, 3.00, 6.30 (பு.நேரம்)
(18146)


## 31ஆம் நாள் நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01 - 08 - 1942 |  | 21 - 04 - 2003 |

### திருமதி நல்லையா மகேஸ்வா (கனடா)

அலைகடலில் துரும்பானோம் - நீவிர்
எம்மைவிட்டு சென்று ஒருமாதம் ஆகியது
நவில்லை அக்கா எம்துயரம் அனலாய் கொதிக்கிறதே
தொலைதூரம் சென்று மெழுகுவர்த்தியாகி - எம்
துயர் போக்கி வாழ்வுதனை உயர்த்தி
இம்மானிட உலகில் தெய்வமாய் மிளிர்ந்து
எம்மைவிட்டு பிரிந்ததேனோ - கண்ணீர்
துளிகளிடையே தேடுகிறோம்
காணவில்லை உம் முகம் - எங்குதான் சென்றீரோ?
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

நாளை (21.5.2003) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.
(18192) - குடும்பத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்



மலர்வு : 23-07-1978 உதிர்வு : 14-05-2003

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவரும் பௌதிகவியல் சிறப்பு மாணவனுமாகிய

### அமரர் கிருஷ்ணபிள்ளை சுரேந்திரன்

அவர்களின் திடீர் மறைவு எமக்குப் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரது துயரில் நாமும் பங்கேற்பதோடு, அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்
(18191)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி. மேற்குப் பிரிவின்
முன்னாள் தலைவர்,

### வைத்திய கலாநிதி எஸ். ஸ்ரீராஜசேகரம்
(ஓய்வு பெற்ற RDHS)

அவர்கள் அண்மையில் வன்னியில் இயற்கையெய்தியமையை அறிந்து ஆறாத்துயரில் மூழ்கியுள்ளோம். அன்னார் இப்பிரதேச மக்களுக்குச் செய்த சேவைகளை இவ்வேளையில் நினைவு கூர்வதுடன், ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்தித்து, துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுகின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

மாவடி, வட்டுக்கோட்டை.
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
வலி. மேற்கு பிரிவு.
(18179)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி வீரகத்தி

( ஓய்வு பெற்ற அதிபர், யா/குடமியன் அ.த.க.பாடசாலை)

குடமியன், வரணியைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி வீரகத்தி அவர்கள் நேற்று (19.05.2003) திங்கட்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் வீரகத்தி (ஓய்வு பெற்ற அஞ்சலர்) அவர்களின் அன்பு மனைவியும் வீரகுமார் (இ.போ.ச. பருத்தித்துறை), வீரரமணி(ஆசிரியர், மிருசுவில் அ.த.க.பாடசாலை), மகேந்திரகுமார் (ஆசிரியர், மிருசுவில் அ.த.க. பாடசாலை), மஞ்சுளா(அஞ்சல் அதிபர், சுன்னாகம்), நளாயினி(அஞ்சல் அதிபர், வட்டுக்கோட்டை)ஆகியோரின் அன்புத் தாயாரும் சியாமதி, பாலதேவா (சுகாதார பரிசோதகர், பருத்தித்துறை), சிவசாந்தினி (ஆசிரியர், இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்), இராஜராஜன்(ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), இன்பராஜ்(அஞ்சல் அதிபர், பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜன், அதிரூபன், ஆதவன், கேசவன், விஜா, மேனகை ஆகியோரின் அன்புப பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19-05-2003) திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குடமியன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரகிரி,
குடமியன்,வரணி. (18196)
தகவல்:
ஆ. வீரகத்தி (கணவர்).

## திருமதி கனகசபை இலட்சுமிஅம்மா

(முல்லைத்தீவு)

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை இலட்சுமிஅம்மா நேற்று (19.05.2003) திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கனகசபையின் (முல்லைத்தீவு கரைச்சி குடியிருப்பு) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் சபாரத்தினம், திருமதி தவச்செல்வம் தங்கமுத்து(புலோலிதெற்கு) ஆகியோரின அன்புச் சகோதரியும் நாகேந்திரன்(சிறைச்சாலை, யாழ்ப்பாணம்), பரமேஸ்வரி, கனகேந்திரன்(கனடா), சிவனேந்திரன்(டென்மார்க்), கமலேஸ்வரி(கனடா), சுரேந்திரன்(டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி சுப்பிரமணியம் மகாலட்சுமி(கரைச்சி குடியிருப்பு முல்லைத்தீவு) அவர்களின மைத்துனியும் தங்கமணி, ஜெயராணி, கல்யாணி, மகேஸ்வரன் (துபாய் கந்தேள், முல்லைத்தீவு), சிவானந்தம்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முதலாம் கட்டை ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறையில்(ஆறுபாகக் கிணற்றடி) இன்று (20.05.2003) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகள் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் கட்டை ஒழுங்கை,
புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை.
(ஆறுபாகக் கிணற்றடி) (18187)
தகவல்:
க.நாகேந்திரன்
(மகன்)

# பாடசாலைகளுக்குத் தளபாடம் 'நிகொட்' அமைப்பு அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,மே20

யாழ்.மாவட்டத்தில் உள்ள 43 பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கும் 'நிகொட்' அமைப்பின் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக நான்கு பாடசாலைகளுக்கு நேற்றுத் தளபாடங்கள் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் உள்ள ஐந்து வலயங்களிலும் 43 பாடசாலைகளுக்கு 180 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களை இந்த வருடத்தில் வழங்க 'நிகொட்' அமைப்பு திட்டம் வகுத்திருந்தது.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக நான்கு பாடசாலைகளுக்குத் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பான வைபவம் நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

கொழும்புத்துறை 'துரையப்பா ம.வி., கொழும்புத்துறை இந்து ம.வி., அரியாலை ஸ்ரீ பார்வதி ம.வி., வண்ணை நாவலர் ம.வி. ஆகிய பாடசாலைகளுக்கான தளபாடங்களை யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் அந்தந்தப் பாடசாலை அதிபர்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்துகொண்டார்.

ஏனைய பாடசாலைகளுக்கு படிப்படியாக இந்த தளபாடங்கள் வழங்கப்படும் என்று 'நிகொட்' அமைப்பின் பிரதித்திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்தார். (ம-3)

## போராளிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

காயமடைந்தவர்கள் உடனடியாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்றுப் பகல் ராசிக் குழு உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

மட்டக்களப்புப் பொலீஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போராட்டம் வலி.வடக்கில உள்ள ஏனைய திணைக்களங்களுக்கு முன்பாகவும் தொடர்ந்து நடத்தப்படவிருக்கின்றது.

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இயங்கும் திணைக்களங்களை வலி.வடக்கில் இயங்கச்செய்வதும் போராட்டத்தின் ஓர் அம்சமாகும். (ம-3-6-86)

## அமெரிக்கா மீண்டும் வலியுறுத்து

விடுதலைப் புலிகள் மீண்டும் சமாதானப் பேச்சுக்களுக்கு செல்லவேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ், பேச்சு ஒன்றே இனப்பிரச்சினை தீர்வுக்கான ஒரே வழி எனத் தெரிவித்தார். தற்போதைய நிலைமை குறித்து அமெரிக்க மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் சொன்னார்.

சமாதானப் பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகள் திரும்பவேண்டும் என அமெரிக்கா மீண்டும் வலியுறுத்துவதாகவும் அவர் சொன்னார். (ம)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளைப் பங்குபற்ற வைப்பதற்காக முயற்சி மேற்கொண்டுள்ள நோர்வே சமாதானக் குழுவின் தலைவர் விடர் ஹெல்கிஸன் நேற்று அல்லது இன்று கிளிநொச்சிக்கு வந்து புலிகளுடன் பேசுவார் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. இவரின் விஜயம் தற்போது பிற்போடப்பட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது.

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குகின்றது.

இந்த நிதி உதவி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாகவும் ஐ.நா. ஊடாகவும் இலங்கைக்கு வழங்கப்படும் என கொழும்பில் தங்கியுள்ள நோர்வே பிரதி வெளி விவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் தெரிவித்தார். (ம)

# வெள்ளத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறை பொலீஸார் தெரிவிக்கின்றனர். பல பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதால் மீட்புப் பணிகளில் 13 படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

புலத்சிங்கள, பதுரலிய, மீகஹதென்ன, மத்துகம, வியாங்கல்ல ஆகிய இடங்களுக்குச் செல்லும் வீதிகளில் வெள்ளம் தொடர்ந்து பாய்கின்றது. போக்குவரத்துக்கள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ள அகதிகளுக்கு உலா உணவுப் பொருள்கள் மற்றும் சமைத்த உணவு, பாண் ஆகியன சீராக விநியோகிக்கப்படுவதாக மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

**இரத்தினபுரியிலேயே அதிக உயிரிழப்பு**

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளம், மண்சரிவு காரணமாக 93பேர் உயிரிழந்துள்ளனர் என்று இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலினி பிரேமரட்ன தெரிவித்தார். எப்பாத்தவில் வீடுகள் மண்சரிவில் புதையுண்ட இடத்திலிருந்து 48சடலங்கள் மாத்திரமே இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

காவத்தை, கலஸ்எல்ல தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவால் 6தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர்.

நிவித்திகல, பாராவத்தை தோட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு தோட்டத் தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர்.

காவத்தை, தொலஸ்வல தோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவனொருவன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டான்.

இரத்தினபுரி மாவட்டத்தில் நியூ மகாவல, ஹணப்பை தோட்ட யாயின்ன டிவிசன் ஆகிய இடங்களில் ஏற்பட்ட மண்சரிவுகள் காரணமாக 35பேர் காயமுற்று காவத்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சுமார் 100 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

**மாத்தறை, காலி உயிரிழப்புகள்**

மாத்தறை, காலி மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு காரணமாக 21பேர் உயிரிழந்துள்ளனர். தெனியாயவில் சிக்குண்டு வெள்ளத்தில் 11பேரும், ஊருபொக்க என்ற இடத்தில் ஏழு பேரும் உயிரிழந்தனர். மேலும் கம்புறுப்பிட்டியவில் இருவரும் ஹக்மனையில் ஒருவரும் உயிரிழந்தனர்.

காலி மாவட்டத்தில் ஆறு பேர் கொல்லப்பட்டனர். நெளுவ பிரதேசத்தில் ஐந்து பேரும் உடுகம பிரதேசத்தில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். (ம)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிப்பின் கீழ் இணைப்பதிகாரி ஒருவரை நியமித்துள்ளார். நேற்று திங்கட்கிழமை அவர் நியமிக்கப்பட்டார். உதவிப் பணிகளில் ஆயுதப் படையினரையும் பொலீஸாரையும் ஈடுபடுமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (ம)

## உதவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதிக்கும் இதே நிலைதான் ஏற்படும் என்று கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டினர்.

எனவே அதிகாரம் உள்ள நிதி, நிர்வாகத்தைக் கையாளக் கூடிய கட்டமைப்பு ஒன்று விரைவில் உருவாக்கப்பட வேண்டும் என்று கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

சட்டரீதியான அமைப்பு ஒன்று இல்லாவிட்டால் ஒதுக்கப்படும் நிதியை அரசு புனர்வாழ்வுப் பணிக்கு செலவிடாமல் இராணுவ செலவீனத்துக்கு பயன்படுத்தும் என்ற சந்தேகம் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது என்றும் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டினர்.

இந்த சந்திப்பில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், என்.ரவிராஜ், அ.விநாயகமூர்த்தி, ஜி.ஜி.கஜேந்திரகுமார், தங்கவடிவேல் ஆகியோர் பங்குபற்றினர். (ம-3-4)

## வெள்ளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலையணை, படுக்கை விரிப்புகள், பாடசாலை உபகரணங்கள் என்பன தேவையாக உள்ளதாக அமைச்சர் பெ.சந்திரசேகரன் தம்மிடம் கோரியுள்ளதாக அரச அதிபர் பத்மநாதன் தெரிவித்தார்.

இத்தகைய உதவிப் பொருள்களை கிராமசேவையாளர்கள் மூலம் பெற்று உதவுமாறு அரச அதிபர் பிரதேச செயலாளர்களைக் கேட்டுள்ளார்.

உதவிப் பொருள்கள் வழங்க விரும்புபவர்கள் கிராமசேவையாளர்கள் மற்றும் பிரதேச செயலர்களுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை -

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக பொருள்களை சேகரிக்கும் பணிகள் கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலும் இடம்பெற்றன.

தமிழர் எழுச்சிப் பேரவை இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளது. (ம-3-4)


புனர்வாழ்வு அமைச்சினால் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்படும் Vocational Training Center களிற்கும், யாழ்.மாவட்டத்தில் சங்கானை, ஊர்காவற்துறை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் செயற்படும் Vocational Training Center களிற்குமான தலைமை நிறுவனமாக எமது நிறுவனமே செயற்படுவதுடன் அவற்றில் பயில்கின்ற மாணவர்களுக்கான பரீட்சைகள், மதிப்பீடுகள், சான்றிதழ் வழங்கல்கள் என்பவை எமது நிறுவனத்தாலேயே மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

ITP

# INFORMATION TECHNOLOGY PARK

Under the Purview of

Ministry of Rehabilitation , Resettlement & Refugees

272, Stanley Road, Jaffna, Sri Lanka.

Telephone: 021-2223641 E-mail: itp@sltnet.lk.

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் 2003 ஆம் ஆண்டின் 2ஆம் பருவத்திற்குரிய கணனிக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 20-05-2003 தொடக்கம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**Certificate Courses**

MS-Word, MS-Excel, MS-Access, AutoCAD, PageMaker, CoredDRAW.

Duration - 3Months | Course Fee-1000/-

Webpage & Graphics Design, C/C++, Visual Basic, Java, Oracle, Internet & E-mail, Hardware, HTML&Java Script.

Duration - 4 Months | Course Fee-1800/-

**Diploma Courses**

| Course Title | Duration | Fee |
|---|---|---|
| Dip. in MS-Office | 5 | 2800/- |
| Dip. in DTP | 5 | 2400/- |
| Dip. in Hardware Technology | 6 | 3200/- |
| Dip. in Information Technology | 4 | 4750/- |
| Dip. in Computer Programming | 6 | 5500/- |

விண்ணப்பம்/ பதிவுகளிற்கான முடிவுத் திகதி- 20-06-2003

வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம் - 15-06-2003

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 16-06-2003

எமது நிறுவனத்தில் Diploma in Ms-Office, Diploma in Hardware Technology ஆகிய பயிற்சிநெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கு DIT (Diploma in Information Technology) இல் பாடவிலக்கு(Exemption)வழங்கப்படுகின்றது. எனவே மாணவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பாடவிலக்கு விபரங்களைப் பெற்று பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் Diploma in IT சான்றிதழைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**Workshop Classes**

| Courses | Duration | Fee |
|---|---|---|
| Hardware | 20 hours | 1000/- |
| Internet & E-mail | 20 hours | 1000/- |
| Computer Typesetting | 20 hours | 1000/- |
| Computer awarness for beginners (கணனி பற்றிய அடிப்படை அறிவைப்பெற) | 20 hours | 250/- |

பயிற்சிப்பட்டறைகள் யாவும் 01-06-2003 இல் இருந்து ஆரம்பமாகும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**On line Classes**

| Course | Duration | Fee |
|---|---|---|
| Diploma in PC Application & Office Management (Specialy for Workers) | 3Months | 2750/- |

Week day Morning and Evening classes only.

Start on- 16-06-2003

கற்கை நெறிகளுக்கான பதிவுக் கட்டணம் ரூபா 250/- மட்டுமே.

**INTERNET CAFE**

யாழ்மாவட்டத்திலேயே அதிகரித்த வேகத்துடன் மெருகூட்டப்பட்டு இணையசேவையானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. புதிய அங்கத்தவர்கள் 01-06-2003 இல் இணைந்துக் கொள்ளப்படுவர். ஏற்கனவே அங்கத்தவராகத் தம்மை இணைத்துக்கொண்டவர்கள் தமது பதிவுகளைப் புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*Centre for Information Technology*

For further Details: *Course Manager* Information: *Director*



**CHEMISTRY DAY CLASS**

'கடந்த காலத்தவறுகள் நிகழ்காலத்தில் நிகழாதிருக்கட்டும்'

அலகுரீதியான மீட்டல்.

- அலகுரீதியான வினாவிடை
- அச்சடிக்கப்பட்ட பாடக் குறிப்புகள்
- மாதிரி வினாக்கள்
- கருத்தரங்குகள்

ஆரம்பம்: 21.05.2003 - 9 a.m.

By : அன்பழகன்

முக்கிய அலகுகள் யாவும் ஒரே காலப் பகுதியில் ஆரம்பிப்பதால் தவறவிடாதீர்கள்

NEW SCIENCE CENTRE

யாழ்நகர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.